விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 25
ஒலி 201 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 23 ஞாயிற்றுக்கிழமை (07.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## சாவகச்சேரி வைத்தியசாலை விவகாரம்
# மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

**சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை உடன் வழமைக்கு திரும்ப வலியுறுத்தி நாளை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மற்றும் கடையடைப்புக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னேற்றத்தை வலியுறுத்தியும் வைத்திய பணிகளை உடன் வழமைக்கு திரும்ப வலியுறுத்தியும் நாளை திங்கட்கிழமை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக காலை 8 மணியளவில் கூடி போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

போராட்டம் தொடர்பான துண்டுப்பிரசுரம் தென்மராட்சி பகுதிகளில் விநியோகிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னேற்றத்திற்காக செயற்பட முனையும் புதிய வைத்திய அத்தியட்சகருக்கு எதிராக முன்னெடுக்கப்படும் சதிகளை உடைத்தெறியவும் வைத்தியசாலையின் பணிகளை உடன் வழமைக்கு திரும்ப வலியுறுத்தியும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கும் கடையடைப்புக்கும் சாவகச்சேரி பொது அமைப்புக் 19

## அரச துறையினருக்கு சம்பள அதிகரிப்பு இல்லை

(கொழும்பு)

அரச துறையினரின் சம்பளத்தை இந்த வருடம் மீண்டும் அதிகரிக்க முடியாது என ஜனாதிபதி 19

## முன்னாள் போராளி மன்னாரில் மர்ம மரணம்



19

## தேசிய அரசை ஸ்தாபிக்கும் ரணில் திட்டத்துக்கு ஆதரவில்லை
### பெரமுன திட்டவட்டமாக அறிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசொன்றை ஸ்தாபிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முற்படுவாராயின் அதற்கு ஒத்துழைப்பு வழங்காதிருக்க ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தேசியமட்டத்திலான தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில், இவ்வாறானதொரு நகர்வுக்கு ஒத்துழைத்தால் அது கட்சிக்கு மேலும் பின்னடைவாக அமை 19

## பூநகரியில் கோர விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட் பட்ட பரந்தன் பூநகரி வீதியில் நேற்று மதியம் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி 19

## யாழ்.கொழும்புத்துறையில் 2 பிள்ளைகளின் தாய் கத்தியால் குத்திக் கொலை

(யாழ்ப்பாணம்)

கொழும்புத் துறைப் பகுதியில் இரண்டு பிள்ளைகளின் தாயொருவர் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

திவிகரன் நிஷானி என்ற 29 வயதான பெண்ணே உயிரிழந்துள்ளார்.

கொழும்புத்துறை ஏவி வீதி மூன்றாம் ஒழுங்கையில் உள்ள வீட்டி 19

## பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை
### முன்னாள் ஜனாதிபதி மகிந்த



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை என அதன் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டி 19

## யாழிலிருந்து வவுனியா நோக்கி பேருந்தில் பயணித்த இருவர் மீது வாள்வெட்டு
### சந்தேகத்தில் ஒருவர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இரணைமடுச் சந்திக்கு அண்மித்த பகுதியில் பேருந்தில் பயணித்த இருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போதுதாக்குதலில் படுகாயமடை 19

## மசகு எண்ணெய் விலை வீழ்ச்சி

(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெய் விலை நேற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 83.16 அமெரிக்க டொலராக 19

## திருகோணமலையில் இன்று சம்பந்தனுக்கு இறுதிக்கிரியை

(திருகோணமலை)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் இரா.சம்பந்தனின் இறுதிக் கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் இடம்பெறவுள்ளது.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய அறிவித்தல் நேற்று வெளியாகியுள்ளது.

அதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்பாக இறுதி அஞ்சலிகளை திருகோணமலை, தபால் கந்தோர் வீதியிலுள்ள சம்பந்தனின் இல்லத்தில் 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




JSAC நிறுவனமானது 2022 ஆம் ஆண்டு முதல் The Asia Foundationஇன் நிதியுதவியுடன் பெண் சிறு தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்துவதற்கான ஒரு செயற்றிட்டத்தை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தி வருகிறது. இச்செயற் திட்டத்தின் ஒரு பகுதியாக, முல்லைத்தீவு மாவட்டத்தின் 6 பிரதேச செயலகங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 34 பெண் சிறு தொழில் முயற்சியாளர்களையும், மேலும் கரைதுறைபற்று பிரதேச செயலகத்திலிருந்து 10 சிறு தொழில் முயற்சியாளர்களையும் இணைத்து 2024 ஜுலை 8 ஆம் திகதி(திங்கட்கிழமை) (9.00am-7.00pm) மாஞ்சோலை பிரதேச வைத்தியசாலை வளாகத்தில் வர்த்தக கண்காட்சி நடாத்தப்படுகிறது. இவ் விற்பனை கண்காட்சிக்கு முல்லைத்தீவு மாவட்ட ஏற்றுமதியாளர்கள், பார்வையாளர்கள் மற்றும் நுகர்வோர் அனைவரும் வருகை தந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள் (C-0749)

## வாடகைக்கு உண்டு

கொழும்பு - வெள்ளவத்தையில் இரண்டு வீடுகள் அபாட்மென்டில் முழு தளபாடங்களுடன் ( Fully Furnished. குளிரூட்டப்பட்ட சொகுசு மற்றும் குளிரூட்டப்படாதது.)

நாளாந்த / மாதாந்த வாடகைக்கு உண்டு.

**077 711 1599**
**077 899 3871, 076 278 8412** (C-747)

## உதவியாளர்கள் தேவை

பொருட்களை விநியோகம் செய்யும் வாகனத்திற்கு உதவியாளர்/ பண வசூலிப்பாளர் தேவை. (25 - 45 வயதிற்கு உட்பட்ட)

தொடர்புகளுக்கு:
**077 009 0189** (1405)

## சொர்க்கம் திருமண சேவை

- கனடாவில் வசிக்கும் 39 வயதுடைய R.C (Machine operator) மணமகனுக்கு தகுந்த மணமகளை இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.
- 1993 இல் பிறந்த வைத்தியர் மணப்பெண்ணுக்கு தகுந்த மணமகனை (வைத்தியர்) இலங்கையில் எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு கொள்ள: **001 416 666 1855** (கனடா)
**077 887 6969, 077 200 0230** (யாழ்ப்பாணம்) (139)


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா இருபது இலட்சம் 20,00,000/=

**Golden Real Estate (pvt) Ltd**
**077 029 4164,**
**077 329 4130, 077 294 1521** (1399)

## மரண அறிவித்தல்



பிறப்பு 01 - 01 - 1951

இறப்பு 06 - 07 - 2024

**சின்னையா டியூக்பல்குணன் லாலா** (லாலா மாஸ்ரர்)
(ஓய்வு பெற்ற கணித ஆசிரியர்)

ஞானியர் வளவு உடுவிலைப் பிறப்பிடமாகவும் முகாந்திரம் ஒழுங்கை மல்லாகத்தை வசிப்பிடமாவும் கொண்ட சின்னையா டியூக்பல்குணன் லாலா நேற்று 06.07.2024 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - பூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் நாகேஸ்வரி தம்பதிகளின் மருமகனும் கோசலேஸ்வரி(கோசலா)யின் பாசமிகு கணவரும் கௌதமியின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், கனகலிங்கம், இராஜலஷ்மி, யோகலிங்கம், நடேசலிங்கம், கமலவேணி மற்றும் சாந்தபவானி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சஞ்சீவன், சுகன்யா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஜெயநீதன் அவர்களின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2024) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**021 224 0781**
**077 896 1999** (1407)

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

# ஜெயலட்சுமி கந்தசாமி

(ஓய்வுபெற்ற கணித ஆசிரியை - யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)



தோற்றம் - 20.01.1953 மறைவு - 28.06.2024

உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயலட்சுமி கந்தசாமி கடந்த 28.06.2024 வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேனாதிராஜா - இராசம்மா தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகளும், கந்தசாமி அவர்களின் ஆருயிர் மனைவியும் சேயோனின் அன்புத் தாயாரும்சத்தியலட்சுமி, இரவீந்திரநாதன், இராஜதிலகம், காலஞ்சென்ற சித்திராலட்சுமி மற்றும் சுரேந்திரநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான அற்புதசுந்தரி, சுப்பிரமணியம், முத்துக்குமாரசாமி, ஆறுமுகசுவாமி, லோகநாயகி ஆகியோரின் அன்பு மருமகளும் குமாரசுப்பிரமணியம், பராசக்தி, தனலட்சுமி, மங்கையர்க்கரசி, இந்திராதேவி, சித்திராதேவி, முரளிதரன், குமுதினி, முகுந்தன், வாஹினி, மாதினி, ஜனனி, துஷ்யந்தன், காலஞ்சென்ற பாலகிருஷ்ணேஸ்வரன் மற்றும் இரஞ்சிதராணி, விபலினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் பவஹாரிணி, நாதஸ்வரூபிணி (இனிமை), வித்தியானந்தி ஆகியோரின் பாசமிகு சின்னம்மாவும் சியாமசுந்தரன், தாரிணி, பாமினி, அபிராமி, கோசலைகோபன் ஆகியோரின் பாசமிகு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிமுதல் நண்பகல் 12.00 மணி வரை (கனடா நேரம்) Chapel Ridge Funeral Home (8911 Woodbine Ave, Markham, ON L3r 5G1) இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் அதேஇடத்தில் இறுதிக் கிரியைகள் நண்பகல் 12.00 மணி முதல் 1.30 மணிவரை நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் Highland Hills Crematorium இல் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு:
சேயோன் (கனடா) - 437 872 1499
இரவீந்திரநாதன், இராஜதிலகம்,
சுரேந்திரநாதன் (இலங்கை) - 077 801 2227 (1406)

தகவல் :
சேயோன் (மகன்)
"சத்தியவாசா"
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கப்பூர் செல்கிறார் அமைச்சர் அலி சப்ரி



(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இன்று ஞாயிற்றுக்கிழமை சிங்கப்பூருக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

சிங்கப்பூர் வெளிவிவகார அமைச்சர் கலாநிதி விவியன் பாலகிருஷ்ணனின் அழைப்பின் பேரில், அமைச்சர் அலி சப்ரி இந்த விஜயத்தை முன்னெடுக்கிறார். இந்த விஜயத்தின் போது, வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி சிங்கப்பூர் அமைச்சருடன் இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முக உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபடுவார்.

இதேவேளை, சிங்கப்பூரில் 9ஆம் திகதி நடைபெறவுள்ள 2024 ஆண்டிற்கான ரொய்ட்டர்ஸ் நெக்ஸ்ட் ஆசிய-பசுபிக் உச்சி மாநாட்டில் பங்கேற்க உள்ளார். (நி)


**லங்கா மஹால் (PVT) LTD**

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615671 9**

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974 (1375)

**மணமகள் தேவை**

1995. இந்து. திருவோணம் DOCTOR, Kondavil மணமகள் பதிவு இல: 10259 தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. www.EQMarraigeService.com இணையவழிதிருமண சேவை கொழும்பு 04
**அழையுங்கள் 076 664 9401** (A-234)

**மணமகள் தேவை**

1975. இந்து. அவிட்டம் Engineer, U.K, (Jaffna) மணமகன் பதிவு இல: 10773 தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. www.EQMarraigeService.com இணையவழிதிருமண சேவை கொழும்பு 04
**அழையுங்கள் 076 664 9401** (A-234)

**மணமகன் தேவை**

1995. இந்து. பூரம் DOCTOR, Jaffna மணமகள் பதிவு இல: 10663 தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. www.EQMarraigeService.com இணையவழிதிருமண சேவை கொழும்பு 04
**அழையுங்கள் 076 664 9401** (A-234)

**மணமகன் தேவை**

1997. இந்து. கேட்டை BUSINESS DEVELOPPER, Jaffna மணமகள் பதிவு இல: 10751 தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. www.EQMarraigeService.com இணையவழிதிருமண சேவை கொழும்பு 04
**அழையுங்கள் 076 664 9401** (A-234)

**மணமகள் தேவை**

1992. இந்து. கார்த்திகை Development Officer, Jaffna மணமகன் பதிவு இல: 10773 தரகர் கூலி இல்லை. பதிவு கட்டணம் மட்டுமே. www.EQMarraigeService.com இணையவழிதிருமண சேவை கொழும்பு 04
**அழையுங்கள் 076 664 9401** (A-234)


## யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 2024/2025 ஆம் ஆண்டிற்கான சிற்றுண்டிச்சாலை நடத்துவதற்கான பகிரங்க கேள்விப்பத்திரம் கோரல்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் அமைந்துள்ள சிற்றுண்டிச்சாலையினை நடத்துவதற்கான விண்ணப்பப்படிவத்தினை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் 2024.07.08 ஆம் திகதி முதல் 2024.07.19 ஆம் திகதி வரை பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் 2024.07.22 ஆம் திகதி மதியம் 12.00 மணிக்கு முன்னர் தலைவர், பிராந்தியப் பெறுகைக்குழு, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இராச வீதி, கோப்பாய் எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.

**கூறுவிலை திறக்கும் காலம்:**- 2024.07.22 மாலை 3.00 மணி

மேலதிக விபரங்களை கல்லூரி அலுவலகத்தில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை பெற்றுக்கொள்ள முடியும்.

**தி.ஜெயகாண்டீபன்**
**பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,**
**இராச வீதி, கோப்பாய்.**
**தொலை பேசி இல:- 021 223 0036** (C-717)

குடும்ப புனர்வாழ்வு நிலையமானது (FRC) உளச்சமூக துறையில் பணியாற்றி வரும் ஒரு தேசிய இலாபநோக்கற்ற அரச சார்பற்ற நிறுவனமாகும். இந்த நிறுவனம் ஒன்றிணைந்த புனர்வாழ்வு சேவைகளை (MHPSS) வழங்கி வருவதோடு குறிப்பாக உளநல மற்றும் உளசமூக சேவைகளை குறிப்பாக மனக்காயங்களுடன் இருக்கும் இலங்கையர்களுக்கு முறையாக வழங்கி வருகின்றது. இந் நிறுவனம் பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய எதிர்ப்பார்க்கின்றது.

**உளச்சமூக பணியாளர் - 1 (மன்னார் மாவட்டம்)**

**பிரதான வகிபாகம்:** பாதிக்கப்பட்டவர்கள் என அடையாளப்படுத்தப்படுவர்களுக்கு தனி மற்றும் குழு உளவளத்துணை சேவைகளை வழங்குதல், உளச்சமூக சேவைகளை வழங்குவதில் பிரதான பங்கு வகித்தல், துணைநாடிகளின் தொடர் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு சேவைகளை மேற்கொள்ளல்

**எதிர்பார்க்கப்படும் தகைமைகள்**

- உளவியல் துறையில் இளமாணி/ டிப்ளோமா பட்டம் பெற்றிருத்தல்
- குறைந்தது 2 வருடங்கள் உளவளத்துணை வழங்கிய அனுபவம்

**சம்பளம் :** அனுபவத்தை பொறுத்து நேரில் பேசி தீர்மானிக்கப்படும்

இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் உங்கள் சுயவிபரக்கோவையை (Subject எனும் பிரிவில், விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு, இரண்டு உறவினரல்லாத சிபாரிசு செய்யக்கூடிய நபர்களுடன்), psychologist@frcsl.org (copied to, frcsl@slt.lk) முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**Executive Director**
**Family Rehabilitation Centre**
**296/14, Park Road, Colombo-05** (1396)

குடும்ப புனர்வாழ்வு நிலையமானது (FRC) உளச்சமூக துறையில் பணியாற்றி வரும் ஒரு தேசிய இலாபநோக்கற்ற அரச சார்பற்ற நிறுவனமாகும். இந்த நிறுவனம் ஒன்றிணைந்த புனர்வாழ்வு சேவைகளை (MHPSS) வழங்கி வருவதோடு குறிப்பாக உளநல மற்றும் உளசமூக சேவைகளை குறிப்பாக மனக்காயங்களுடன் இருக்கும் இலங்கையர்களுக்கு முறையாக வழங்கி வருகின்றது. இந் நிறுவனம் பின்வரும் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய எதிர்ப்பார்க்கின்றது.

**கள இணைப்பாளர் - 1 (மன்னார் மாவட்டம்)**

**பிரதான வகிபாகம்:** கள மட்டத்தில் நிறுவனத்தின் செயற்பாடுகளை பொறுப்பேற்று செயற்படுத்தல், இயலளவு விருத்தி செயற்பாடுகளில் பங்குபற்றல், கு.பு.நிலையத்தினை பொது வெளிகளில் பிரதிநிதித்துவபடுத்தல். குறிப்பிட்ட பங்குதாரர்களுடன் நல்லுறவை பேணுதல்.

**எதிர்பார்க்கப்படும் தகைமைகள்**

- க.பொ.த உயர் தரம் சித்தி/ சமூக சேவைத்துறையில் டிப்ளோமா பட்டம்/ ஏனைய பொருத்தமான தகைமைகள்
- குறைந்தது 2 வருட அனுபவம்
- பொதுவாக எதிர்பார்க்கை : உள்ளூர் மொழிகளில் பரீட்சயமும் ஆங்கில மொழியாற்றலும்.

**சம்பளம் :** 30 000 - 35 000 + மேலதிக கொடுப்பனவு (அனுபவத்தை பொறுத்து தீர்மானிக்கப்படும்)

இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் உங்கள் சுயவிபரக்கோவையை (Subject எனும் பிரிவில், விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்டு, இரண்டு உறவினரல்லாத சிபாரிசு செய்யக்கூடிய நபர்களுடன்), manager.pro@frcsl.org (copied to, frcsl@slt.lk) முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**Executive Director**
**Family Rehabilitation Centre**
**296/14, Park Road, Colombo-05** (1396)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# றொனால்டோவின் போர்த்துக்கல் 'அவுட்'

## யூரோ கால்பந்தில் பெரும் சோகம்

யூரோ கிண்ண காலிறுதியில் றொனால்டோவின் போர்த்துக்கல் அணி, பிரான்சிடம் வீழ்ந்தது.

ஜேர்மனியில் யூரோ கிண்ண கால்பந்து தொடர் நடக்கிறது. ஹம்பேர்க்கில் நடந்த காலிறுதியில் உலகின் "நம்பர் -" பிரான்ஸ், "நம்பர் -6" போர்த்துக்கல் அணிகள் மோதின.

அணித் தலைவர் றொனால்டோ உள்ளிட்ட போர்த்துக்கல் வீரர்கள் சிறப்பாக செயற்பட்ட போதும், சரியான "பினிஷிங்" இல்லாததால் கோல் அடிக்க முடியவில்லை.

முடிவில் போட்டி நேரத்தில் (90 நிமிடம்) இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. வெற்றியாளரை முடிவு செய்ய போட்டி, கூடுதல் நேரத்துக்கு (30 நிமிடம்) சென்றது. இதிலும் இரு அணி தரப்பில் யாரும் கோல் அடிக்க வில்லை.

முடிவில் போட்டி 0-0 என ஆனது. இதனால் "பெனால்டி ஷூட் அவுட்" முறைக்கு சென்றது. இரு அணிக்கும் தலா 5 வாய்ப்பு தரப்பட்டன.

இதில் பிரான்ஸ் அணி 5-3 என வெற்றி பெற்று, ஐந்தாவது முறையாக அரையிறுதிக்கு முன்னேறியது. போர்த்துக்கல் அணி வெளியேறியது. அரையிறுதியில் ஸ்பெயின் - பிரான்ஸ் மோதுகின்றன. (7,10)

### பெனால்டியில் என்னதான் நடந்தது?

- முதல் வாய்ப்பில் பிரான்சின் டெம்பெலே கோல் அடித்தார். போர்த்துக்கல் தரப்பில் அணித் தலைவர் றொனால்டோ கோல் அடிக்க ஸ்கோர் 1-1 என ஆனது.
- இரண்டாவது வாய்ப்பில் போபனா (பிரான்ஸ்), சில்வா (போர்த்துக்கல்) கோல் அடித்தனர் (2-2).
- அடுத்து கவுன்டே (பிரான்ஸ்) கோல் அடிக்க, போர்த்துக்கல் தரப்பில் ஜோயா பெலிக்ஸ் வீணடித்தார். பிரான்ஸ் 3-2 என முந்தியது.
- நான்காவது வாய்ப்பில் பார்கோலா (பிரான்ஸ்), மெண்டெஸ் (போர்த்துக்கல்) கோல் அடித்தனர் (4-3).
- ஐந்தாவது வாய்ப்பில் பிரான்சின் ஹெர்னாண்டஸ் கோல் அடிக்க, ஸ்கோர் 5-3 என ஆனது. போர்த்துக்கல் கோல் அடித்தாலும் வெல்ல முடியாது என்பதால் போட்டி முடிவுக்கு வந்தது.



## அக்கராயன் மகா வித்தியாலய 3 அணிகள் மாகாண மட்டத்திற்கு தெரிவு





கிளிநொச்சி அக்கராயன் மகா வித்தியாலயம் மென் பந்து கிரிக்கெட், எல்லே, கைப்பந்து ஆகிய அணிகள் கிளிநொச்சி தெற்கு வலயத்தில் வெற்றிகளை பெற்று மாகாண போட்டிகளுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வலய மட்டத்தில் இடம் பெற்ற போட்டிகளில் மென் பந்து முதலாம் இடம், கைப்பந்து முதலா மிடம், எல்லே மூன்றாம் இடம் ஆகிய இடங்களைப் பெற்று மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளது. (நி-350)

## பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் யாழ். மாவட்ட வீராங்கனைக்கு தங்கப் பதக்கம்



வடமாகாண விளையாட்டு திணைக்களம் நடத்திய மாவட்டங்களுக்கு இடையிலான பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில் யாழ்.மாவட்ட வீராங்கனை என்.டக்சிதா தனது சாதனையை தானே முறியடித்து புதிய சாதனையை பதிவு செய்து தங்கப் பதக்கத்தை கைப்பற்றியுள்ளார்.

வடமாகாண விளையாட்டு திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாவட்டங்களுக்கு இடையிலான ஆண்கள், பெண்களுக்கான மெய்வல்லுநர் போட்டிகள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

இதில் பெண்களுக்கான கோலூன்றி பாய்தல் போட்டியில் யாழ் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த வீராங்கனைகள் என். டக்சிதா 2022 ஆம் ஆண்டு 3.49 பாய்ந்த உயரத்தை இவ்வாண்டு தானே முறி யடித்து 3.57 உயரம் பாய்ந்து தங்கப் பதக்கத்தையும், பி.அபிசாளினி வெள்ளிப்பதக்கத்தையும், எஸ். நிருஷிகா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (நி-90)


## நாகபூஷணி திருமண சேவை

பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்

மிகப்பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தெரிவு செய்யப்பட்டு மிகத் துரிதமாகத் திருமணம் நிறைவேற்றிக் கொடுக்கப்படும்.

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர்

10/2, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்
(BCAS கம்பஸ் இற்கு பக்கத்து லேன்)
021 222 9306, 077 138 7596, 071 999 9306 (1409)


## மரண அறிவித்தல்

பிறப்பு 10 . 03 . 1964



இறப்பு 06 . 07 . 2024

### திருமதி விஜயராஜா சரோஜாதேவி

அல்லாரை வடக்கு கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு 15, இக்பாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயராஜா சரோஜாதேவி அவர்கள் நேற்று (06.07.2024) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் மாரிமுத்து விஜயராஜாவின் அன்பு மனைவியும் விஷாலின் அன்புத் தாயாரும் மாணிக்கம் - சின்னத்தம்பியின் அருமை மகளும் மாரிமுத்து - பசுபதியின் பாசமிகு மருமகளும் சிவக்கொழுந்து, காலஞ் சென்ற ராசம்மா மற்றும் றஞ்சிதம்மா (குஞ்சு), குலநாயகம், இராசநாயகம் (இராசன்), கனகநாயகம் (அப்பன்), விநாயகம் (செல்வம்), பிள்ளைநாயகம் (சுதா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் வரதராசா, சௌந்தரராசா, பவளராணி, சிதம்பரநாயகி, சத்தியநாயகி, ரகுராசன், துசியந்தராசன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.07.2024) ஞாயிற்றுக்கிழமை 2.30 மணிக்கு மாவை கலட்டி தெல்லிப்பழையிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கீரிமலை செம்பன்வாய்க்கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். (C-0750)

மாவை கலட்டி,
கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை.

தகவல் : குடும்பத்தினர்
076 021 6571, 077 330 0989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு விரைந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள் கடந்த இரு தினங்களாக வைத்திய சேவைகளை புறக்கணித்து வரும் நிலையில் நேற்று சனிக்கிழமை காலை கடற்றொழில் அமைச்சரும்-மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான டக்ளஸ் தேவானந்தா வைத்தியசாலைக்கு வருகை தந்து வைத்திய அத்தியட்சகருடன் வைத்தியசாலை நிலவரங்கள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தார்.

இதன்போது வைத்தியசாலையை மேம்படுத்த தன்னால் எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளின் போது ஒரு சில வைத்தியர்களுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் இன்று வைத்தியசாலையை இவ்வாறான தொரு இக்கட்டு நிலைமைக்கு கொண்டு சென்றிருப்பதாகவும் வைத்தியர்களின் பணிப் புறக்கணிப்புக் காரணமாக கடந்த 24 மணித்தியாளங்களாக தனி ஒரு வைத்தியராக நின்று வைத்தியசாலையை இயங்க வைத்து நோயாளர்களை காப்பாற்றி வருவதாகவும் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனா தெரிவித்திருந்தார்.

இதனைவிட வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் சத்திர சிகிச்சைக் கூடம் ஆகியவற்றை இயங்க வைக்கக் கூடிய சாத்தியப்பாடுகள் -ஆளணி காணப்படுவதாகவும் வைத்திய அத்தியட்சகர் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்றிருந்தார்.

இதன்போது வைத்தியசாலையில் கூடிய பொது மக்கள் வைத்தியசாலை சனிக்கிழமை இரவுக்குள் வழமை போன்று இயங்க வேண்டும் இல்லையேல் வைத்திய அத்தியட்சகர் அர்ச்சுனா அவர்களுக்கு ஆதரவளித்தும்-வைத்தியசாலையை இயக்கக் கோரியும் மாபெரும் போராட்டத்தை முன்னெடுப்போம் எனவும் பொதுமக்கள் எச்சரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-30-33)



தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றும் கோண்டாவிலைச் சேர்ந்த நடராசா சுதர்சன் என்பவர் யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ்.சதீஸ்தரன் முன்னிலையில் சத்தியபிரமாண (சிங்களம்/தமிழ்) மொழிபெயர்ப்பாளராக (Sworn translator) நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சத்தியப்பிரமாணம் செய்துள்ளார்.

# வேலை நிறுத்தத்திற்கு தயாராகும் அரச ஊழியர்கள்

(கொழும்பு)

சம்பள முரண்பாடு, சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன் வைத்து அரச சேவையில் பணியாற்றும் பல துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்க ஊழியர்கள் நாளை மறுதினம் சுகயீன விடுமுறை போராட்டம் ஒன்றை முன்னெடுக்க திட்டமிட்டுள்ளனர்.

அதேநேரம் ஆசிரியர்கள் -அதிபர்களும் அன்றைய தினம் சுகயீன விடுமுறை அறிவித்து பணிப்புறக் கணிப்பில் ஈடுபடவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரமும் அதிபர், ஆசிரியர் சங்கங்கள் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டதுடன் கொழும்பில் பெருமளவான அதிபர், ஆசிரியர்கள் திரண்டு பாரிய கவனயீர்ப்புப் போராட்டமொன்றினையும் முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# உலகத்தமிழர்களின் உரிமைக்குரலாக இங்கிலாந்து பாராளுமன்றில் ஒலிக்கட்டும்

## உமாகுமரனிற்கு சீமான் வாழ்த்து





(சென்னை)

தூரத்தில் தெரியும் சிறு பொறியும் இன விடுதலைக் கனவை நனவாக்கும் பெரு வெளிச்சத்தைத் தரவல்லது என பிரித்தானிய பாராளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றுள்ள இலங்கை வம்சாவளி தமிழரான உமா குமரனிற்கு சீமான் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

உமாகுமரனிற்கு அவர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியிலேயே இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"இங்கிலாந்து பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வென்றுள்ள தங்கை உமாகுமரனுக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்கள்.

இங்கிலாந்து பாராளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதல் தமிழர் என்ற பெருமையை பெற்றுள்ளது மிகுந்த மனமகிழ்வை அளிக்கிறது.

இனவழிப்பு தந்த காயங்களோடும் கண்ணீரோடும் ஊரிழந்து உறவிழந்து உரிமையிழந்து உயிர் சுமந்த உடல்களாக அடைக்கலம் தேடி அலைகின்ற நூற்றாண்டுப் பெருந்துயரைக் கண்ட தமிழினத்திற்கு அங்கொன்றும் இங்கொன்றுமாக கிடைக்கும் இதுபோன்ற சிறுசிறு அதிகாரப் பகிர்வும் அங்கீகார நிமிர்வும் மிகவும் இன்றியமையாததாகும்.

தம்மைத் தேர்ந்தெடுத்த ஸ்ட்ராட்ஃபோர்ட்ஸ்போ தொகுதி மக்களின் மேம்பாட்டிற்கும் நல்வாழ்விற்கும் சிறப்புற பணியாற்றவும் உலகத்தமிழர்களின் உரிமைக்குரலாக இங்கிலாந்து பாராளுமன்றத்தில் ஒலிக்கவும் என்னுடைய அன்பும் வாழ்த்துகள்" என தெரிவித்துள்ளார். (நி)

# பணிப் பகிஷ்கரிப்பினால் உயர்கல்வித்துறை முடங்கியுள்ளது

## பணிக்கு திரும்புமாறு பணிப்பு



(கொழும்பு)

நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள இளைஞர்களின் வாழ்க்கையை மேலும் சீர்குலைக்காமல், அனைத்துப் பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்களையும் கடமைக்கு திரும்புமாறு உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் இரண்டு மாத வேதனம் மற்றும் ஏப்ரல் மாதத்திற்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப் படும்.

கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து அவற்றை உதய செனவிரத்ன குழுவிற்கு சமர்ப்பித்து, 2025ஆம் ஆண்டுக்கான வரவு-செலவு திட்டத்தில் உள்ளடக்குவதாகவும் உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் இதன்போது உறுதியளித்துள்ளார்.

நாட்டில் உள்ள 17 பல்கலைக்கழகங்கள் மற்றும் 19 ஒன்றிணைந்த பட்டப்படிப்பு நிறுவனங்களின் 14,600 கல்விசாரா ஊழியர்கள் 65 நாட்களாக பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் முழு உயர்கல்வித்துறையும் முடங்கியுள்ளது. கல்வியைக் கட்டியெழுப்பி, மாணவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதே அனைவரது நோக்கமாக இருக்க வேண்டும் என உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார். (நி)

# இணைய மோசடிகள் தொடர்பில் 5 மாதங்களில் 1093 முறைப்பாடுகள்

(கொழும்பு)

இலங்கையில் இந்த ஆண்டின் கடந்த 5 மாதங்களில் இணைய மோசடி தொடர்பாக 1093 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக கணனி அவசர பதிலளிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும் சமூக ஊடகங்கள் தொடர்பில் 7916 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக அதன் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு பொறியியலாளர் சருக தமுணுகல குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, இணையத்தை பயன்படுத்தி நிதி மோச டியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் 167 வெளிநாட்டவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (நி)

# மோட்டார் சைக்கிள்-டிப்பர் விபத்து 15 வயது மாணவி படுகாயம்

## தந்தையும் மருத்துவமனையில்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மீசாலை பங்களா வீதிச் சந்தியை அண்மித்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு 7மணியளவில் இடம்பெற்ற விபத்தில் 15 வயதான பாடசாலை மாணவி படுகாயமடைந்ததுடன் அவருடைய தந்தையும் காயமடைந்துள்ளார்.

மீசாலையில் இருந்து வந்த மோட்டார்சைக்கிளின் பின்புறமாக அதேதிசையில் வந்த டிப்பர் வாகனம் மோதியதில் மேற்படி விபத்து சம்பவித்துள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து பயணித்த மாணவியின் கால் டிப்பருக்குள் அகப்பட்டு படுகாயமடைந்துள்ளார்.

அத்துடன் மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற தந்தையும் காயமடைந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த இருவரும் சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை: மானிப்பாய் கிராம உப அலுவலகம்

**விண்ணப்பதாரியின் பெயர்: யசோக்குமார் பெண் மேரி கீத்தா**

**முகவரி: ஆதன இல 17 வீதி: சங்கயான் வீதி வட்டாரம்: 12**

சங்கயான் வீதி, ஆதன இலக்கம் 17இல் அமைந்துள்ள, உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் நவாலி இறை பேத்தன் வளவு எனும் பெயருள்ள நிலப்பரப்பு 02 குளி 7.79 விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் து.பாக்கியநாதன் பிரசித்த நொத்தாரிசு அவர்களால் எழுதப்பட்ட 4032ஆம் இலக்க 2002.09.25ஆம் திகதிய உறுதி மூலம் சின்னத்தம்பி செல்லர் என்பவரால் "இவ் ஆதனத்தின் உரிமையாளர் தாமே" என வெளிப்படுத்தல் செய்யப்பட்டு பின்னர் பிரசித்த நொத்தாரிசு து.பாக்கியநாதன் அவர்களால் எழுதப்பட்ட 4098ஆம் இலக்க 2002.10.30ஆம் திகதிய உறுதி மூலம் செல்லர் அருள்நாதன் என்பவருக்கு நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளது. பின்னர் இவ்வாதனம் நவாலியைச் சேர்ந்த யசோக்குமார் பெண் மேரி கீத்தா என்பவருக்கு என பிரசித்த நொத்தாரிசு P.குகனேஸ்வரன் அவர்களால் எழுதப்பட்ட 4578ஆம் இலக்க 2023.08.26ஆம் திகதிய நன்கொடை உறுதி மூலம் கிடைக்கப்பெற்றுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் சி.காசிப்பிள்ளை அவர்களால் வரையப்பட்ட 2152ஆம் இலக்க 2002.03.11ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் 02 நிலப்பரப்பு 7.79 குளி கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

வடக்கு -இராசப்பு குருசுமுத்துவின் ஆதனம்
கிழக்கு - பாணாந்து சுவாம்பிள்ளையின் ஆதனம்
தெற்கு-பாதை
மேற்கு -மருசலின் பாலநாதனின் ஆதனம்

மேற்குறித்த ஆதனத்தை யசோக்குமார் பெண் மேரி கீத்தா என்ற பெயரில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனை யும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,**
**மானிப்பாய்.**

(1404)

# இரத்ததான நிகழ்வு

(யாழ்ப்பாணம்)
மக்கள் வங்கியின் 63 ஆவது ஆண்டை முன்னிட்டு இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று காலை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 8 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை மக்கள் வங்கி, ஸ்ரான்லி வீதிக் கிளையில் இரத்ததான நிகழ்வு இடம்பெறும். (நி)

# மரண அறிவித்தல்

## திருமதி
## விஜயலட்சுமி பரமசிவம்



**தோற்றம்**
**04.12.1943**

**மறைவு**
**04.07.2024**

யாழ்.காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும் கனடா Mississauge வை வதிவிடமாகவும் கொண்ட விஜயலட்சுமி பரமசிவம் அவர்கள் 04.07.2024 வியாழக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற குரு சாமி-ஞானேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை-அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், பரமசிவம் அவர்களின் அன்புத் துணைவியும், ராகுலன் (பிரித்தானியா), வானதி (கனடா), பகீரதி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஷிபானி, சிவகுமார், ரமணன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ராகுல், ரியா, சுருதி, சரண், ரிதன், விதுஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சண்முகவடிவு பஞ்சாட்சரம், நாவுக்கரசி பொன்னம்பலம், பரிமளகாந்தி பண்டிதவரதர், Dr. இலங்கை நாராயணன், காஞ்சனமாலா புவனேந்திரன், தங்கலட்சுமி தர்மபாலசிங்கம், யோகாம்பிகை கஜேந்திரா, ஞானாம்பிகை சண்முகராச ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற அன்னலட்சுமி இராசையா, நேசமலர் தம்பிமுத்து, ஞானமலர் சண்முகராசா, சிவராசலிங்கம், பரமேஸ்வரி பேராயிரவர், சிவயோகராணி சிவஞானசேகரம், காலஞ்சென்ற சிவராசா , இந்திரா தேவி சிவராசலிங்கம், பத்மினி இலங்கை நாராயணன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை திங்கட்கிழமை முற்பகல் 9.30- பிற்பகல் 12.30 வரை Chapel Ridge Funeral Home & Cremation Cente 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada இல் பார்வைக்கு வைக்கப்பட்டு பிற்பகல் 12.30-2.30 வரை இறுதிக்கிரியைகள் நடைபெற்று மாலை 3 மணியளவில் Highland Hills Funeral Home & Cemtery 12492 Woodbine Ave, Gormley, ON L0H 1G0, Canada இல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(1402)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# இராசிபலன்

**07.07.2024**
**ஆனி 23, ஞாயிற்றுக்கிழமை**
**துதியை பின்னிரவு 5.47 மணிவரை**

**பூசம் முழுவதும்**
**சுபநேரம் 8.58-10.28 மணிவரை**
**இராகுகாலம் 4.28-5.58 மணிவரை**

**சந்திராஷ்டமம் - அனுசம்**

**வளவன்**


**மேஷம்**
தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம்.


**கடகம்**
வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், நீங்கள் பார்க்க நினைத்த நண்பர் உங்களைத் தேடி வரலாம், தொழில் நலன் கருதி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.


**துலாம்**
எதிர்பாராத பணவரவுகள் வந்து சேரலாம், பொதுவாழ்வில் புகழ் கூடும், தொழில் வளர்ச்சி கூடும் நாள், சுப காரியங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.


**மகரம்**
குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், பேச்சில் கனிவு பிறக்கும், மன திற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம்


**ரிஷபம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், அரசு வழியில் அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.


**சிம்மம்**
திடீரெனக் கேட்கும் செய்திகளால் திகைப் படையலாம், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.


**விருச்சிகம்**
வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்த்த காரியமொன்று இன்று காலையிலேயே நடைபெறும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.


**கும்பம்**
உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், புதிய பொருட்சேர்க்கையுண்டு.


**மிதுனம்**
உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய நட்பில் நன்மையுண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், பேச்சில் கனிவு பிறக்கும்.


**கன்னி**
குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும் நாள், திடீர் பணவரவு மனதிற்கு மகிழ்ச்சி தரும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.


**தனுசு**
திட்டமிட்ட பணிகளில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், பயணத்தால் மன உழைச்சல் ஏற்படலாம், நீங்கள் பெரியளவில் மதித்த ஒருவர் அர்ப்பத்தனமாக நடந்து கொள்வர்.


**மீனம்**
அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வியாபார விருத்தியுண்டு, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.


**நட்பு என்பது சுக துக்கங்களில் பங்கு கொள்வதாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 449
Viber 076 636 3378



# தேர்தலை தமிழினம் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறது!



எப்படியாவது இந்த ஆண்டில் தேர்தல் ஒன்றை நடத்த வேண்டும் என நாட்டு மக்கள் விரும்புகின்றனர்.

தேர்தலை எதிர்கொள்ள எதிர்க்கட்சிகளும் மிகத் தீவிரமாக உள்ளனர். நடப்பாண்டின் ஆட்சிப்பீடம் மக்கள் ஆணை பெற்ற ஆட்சிப்பீடம் அல்ல. ஆதலால் தேர்தலின் மூலம் மக்கள் ஆணை பெற்றவர்கள் ஆட்சிப்பீடம் ஏற வேண்டும். அதற்கு முதலில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்கிறார்கள்.

மக்களின் மனநிலையும் எதிர்க்கட்சியின் அழுத்தங்களையும் புரிந்து கொண்ட ஆட்சிப் பீடம் தேர்தல் ஒன்றை நடத்தும் முடிவிலேயே உள்ளது.

குறித்த தேர்தலை தேசிய அரசு அமைப்பினூடாக மேற்கொள்ளும் திட்டம் ஆட்சிப்பீடத்திடம் உண்டென்ற கருத்துக்கள் எழுந்துள்ளன.

ஆயினும் பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி போன்ற கட்சிகள் தேசிய அரசிற்கு கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தும் நிலையில் தேசிய அரசு அமையப் போவதில்லை என்ற முடிவுக்கு வந்து விடலாம்.

நடைப்பெறப் போகும் தேர்தல் களத்தில் 13 ஆவது திருத்தச்சட்ட மூலம் பிரதான இடத்தைப் பிடிக்கும் என்பதை ஏலவே நடைபெற்ற சில நிகழ்வுகளினூடே அறிந்து கொள்ளலாம்.

வடக்கிற்கு விஜயம் செய்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நான் ஜனாதிபதியானால் 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை முழுமையாக அமுல்படுத்துவேன் எனக் கூறியிருந்தார்.

அவரின் குறித்த கருத்துக்கு தெற்கில் பாரிய எதிர்ப்புக்கள் எழுந்தமை நாம் அறிந்த விடயமே.

இவ்வாறு இருக்கும் பொழுது இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அப்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைச் சந்தித்த அவர் 13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை முழுமையாக அமுல்படுத்துங்கள் எனத்தெரிவித்திருந்தார்.

13 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை எப்படியாவது அமுல்படுத்தியாக வேண்டும் என்பதில் இந்தியா முழுமூச்சாக நிற்கிறது.

ஆனால் இலங்கை ஆட்சியாளர்களிடம் அதற்கான எந்தத்திட்டமும் இல்லை என்பது தான் உண்மை. அந்த உண்மை இந்தியாவுக்கும் தெரியும். ஆயினும் 13 ஐ அமுல்படுத்த இந்தியா தொடர்ந்தும் அழுத்தம் கொடுக்கும் என தெரிவித்து வருகிறது. இந்தநிலையில் ஒரு விடயத்தை கூர்ந்து கவனிக்கலாம்.

அதாவது வடக்கு தமிழ் மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்கும் இடையிலான முரண்பாட்டை இலங்கை அரசு சாதகமாகப் பயன்படுத்துகின்றதோ எனும் கருத்துக்களும் உள்ளன.

இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறும் இந்திய மீனவர்களை கடல் எல்லையில் வைத்து தடுத்து நிறுத்தாமல் அவர்களை இலங்கை கடற்பரப்புக்குள் புக விடுவது தமிழர்களையும் இந்திய தமிழ் நாட்டு மீனவர்களையும் முரண்பட வைக்கும் செயல்.

இதனூடாக இந்தியாவிற்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் முரணை ஏற்படுத்தி அதனூடாக 13 ஆவது திருத்தச் சட்ட மூலத்தைக் குழப்பும் செயலை ஆட்சிப் பீடம் மேற்கொள்கிறதோ எனும் ஐயம் தமிழ் மக்கள் மத்தியில் எழாமலில்லை.

தேர்தலை மையமாக வைத்து தென்னிலங்கைக் கட்சிகள் வடக்குக்கு பெரு விஜயத்தை மேற்கொள்ளும் நிலையில், பல்வேறான வாக்குறுதிகளை வழங்கி தமிழ் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றன.

நடைபெறப் போகும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளரை நிறுத்தும் முடிவில் தமிழ் தரப்பு எதிரும் புதிருமாக நிற்கும் நிலையில் தமிழ்மக்கள் திரிசங்கு நிலையில் இருப்பது உறுதியாகிறது.

பொதுவேட்பாளரை நிறுத்துவதா இல்லையா என்பதை குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து முடிவெடுப்பதைத் தவிர்த்து பொதுமக்களைச் சந்தித்து அவர்களின் கருத்தைக் கேட்டறிந்து அதனூடாக எடுக்கும் முடிவே சரியானதாக அமையும்.

இல்லையேல் போருக்குப் பின்னர் தமிழ் மக்களின் பலம் குன்றியிருப்பதான செய்தி சர்வதேசத்தின் காதில் ஓதப்படும்.

எனவே இது விடயத்தில் மிக அவதானமாகச் செயற்படுவது நல்லது. நிலை இதுவாக இருக்கையில் பிரித்தானிய தேர்தல் களத்திலும் ஈழத் தமிழர் பிரச்சினை மிக முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்டும் என பிரித்தானியா தேர்தலில் போட்டியிட்ட கென் சர்வேட்டிவ் கட்சி வேட்பாளர் எலியட் கோல் பேர்ன் தெரிவித்திருக்கின்றார்.

பிரித்தானியாவில் தமிழர் செறிந்து வாழும் பகுதியில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

ஈழத்தில் நடந்த மனிதப்படுகொலை மற்றும் போர்குற்ற மீறல்கள் தொடர்பில் நாம் அன்றிலிருந்து இன்றுவரை ஆக்கபூர்வமாக செயற்பட்டு வருகின்றோம்.

தவறிழைத்தவர்களை சர்வதேச நீதிமன்றில் நிறுத்த வேண்டும் எனும் முடிவில் நாம் தளராது நிற்கிறோம். இலங்கையில் சமாதானம் மலர வேண்டும். தமிழ் மக்களுக்கு அனைத்து உரிமைகளும் கிடைக்க வேண்டும். என அவர் கருத்து தெரிவித்திருந்தார்.

சர்வதேச அரங்கில் ஈழத்தமிழர் பிரச்சினை பேசு பொருளாவது நல்லது தான். அதனூடாக தமிழினத்துக்கு நீதியைப் பெற்றுத்தரலாம் எனின் மகிழ்வுதான். ஆயினும் மேற்குறித்த கருத்து தேர்தலை மையப்படுத்தியதான கருத்தாக இருந்தால் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல.

தமிழர் வாழும் பகுதியில் தமிழரின் வாக்குகளைப் பெறும் நோக்கில் மேற்குறித்த கருத்து இருக்குமாக இருந்தால் அதைவிட அபத்தம் வேறு எதுவுமாக இருக்க முடியாது.

ஈழத்தில் தமிழினம் பட்ட இன்னல்கள் ஏராளம். அந்த இன்னல்களுக்கு நீதி கிடைக்க வேண்டியது காலத்தின் கடமை.

இலங்கையில் நடைபெறப்போகும் தேர்தலை தமிழ்மக்கள் எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார்கள் என்பதில் இருக்கிறது தமிழினத்தின் எதிர்காலம்.

> **“பொது வேட்பாளரை நிறுத்துவதா? இல்லையா? என்பது குளிரூட்டப்பட்ட அறையில் இருந்து எடுக்கும் முடிவல்ல. அது தமிழ் மக்களின் ஏகோபித்த முடிவாக இருக்க வேண்டும். இல்லையேல் போருக்குப் பின்னர் தமிழ் மக்களின் பலம் குன்றியிருப்பதான செய்தி சர்வதேசத்தின் காதில் ஓதப்படும்.**

**அபிமன்யு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகாரத்துக்கு எதிரான உரிமைக்குரல்!

**"டுவிட்டரும் ஃபேஸ்புக்கும் பயன்பாட்டுக்கு வந்த அதே ஆண்டில்தான் விக்கிலீக்ஸ் தளத்தை ஆரம்பித்தார் அசாஞ்சே. அந்த இரண்டு சோஷியல் மீடியா நிறுவனங்களும் இன்று அடைந்திருக்கும் உயரங்களும்புகழும்வேறாக இருக்கலாம்.**




துணிச்சலாக உண்மைகளை வெளியிடுபவர்கள் எதிர்கொள்ளும் துயரங்கள் ஏராளம். அதிலும், அதிகாரத்துக்கு எதிராக உண்மை பேசினால் அவ்வளவுதான்! "மக்கள் தங்கள் எதிரே இருக்கும் முடிவற்ற வெற்றிடத்திலிருந்து தங்களுக்கான பாதையைத் தேர்வு செய்துகொள்ள உண்மையே உதவும் என்று சொன்ன ஜுலியன் அசாஞ்சே அவர்களில் ஒருவர். உண்மையைப் போலவே முகமூடி அணிந்துவரும் பொய்களால் சூழப்பட்டிருக்கும் இன்றைய யுகத்தில், லட்சக்கணக்கான உண்மை ஆவணங்களை வெளியிட்டு உலகையே அதிரவைத்த "விக்கிலீக்ஸ் அமைப்பின் நிறுவனர் 14 ஆண்டுகள் தனிமைத் தஞ்சம் மற்றும் சிறை வாழ்விலிருந்து ஒருவழியாக விடுதலை பெற்று தன் சொந்த மண்ணான அவுஸ்திரேலியாவை அடைந்திருக்கிறார் அசாஞ்சே.

அவர் பத்திரிகையாளரா, டெக் போராளியா என்ற விவாதங்கள் இன்னமும் முடிவடையவில்லை. அரசுகள் வைத்திருந்த ரகசிய ஆவணங்கள் பலவற்றை ஹேக்கிங் நுட்பத்தைப் பயன்படுத்தி அவர் கைப்பற்றி அம்பலப்படுத்தினார். மக்களை ரகசியமாகக் கண்காணிக்கும் அரசுமுறைக்கு எதிராகவும், நியாயமற்ற போர்களுக்கும் ஒடுக்குமுறைக்கும் எதிராகவும் தன் கணனித் திறனைப் பயன்படுத்தி போர் புரிந்தார்.

உலகெங்கும் இருக்கும் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் தங்கள் நாட்டுக்கு 45 ஆண்டுகளாக அனுப்பிய கடிதங்களை மொத்தமாக விக்கிலீக்ஸ் வெளியிட்டது. பல்வேறு நாடுகளில் அமெரிக்கா நிகழ்த்திய சதிகள் அதனால் அம்பலமாகின. அது மட்டுமல்ல, ஐ.நா பொதுச் செயலாளர், ஜேர்மனி ஜனாதிபதி உள்ளிட்ட பலரை அமெரிக்கா உளவு பார்ப்பதையும், அவர்களின் உரையாடல்களை ஒட்டுக் கேட்பதையும் விக்கிலீக்ஸ் வெளியிட்ட ஆவணங்கள் காட்டிக் கொடுத்தன.

ஆப்கானிஸ்தான் போரில் தாங்கள் வெற்றி பெற்றிருப்பதாக அமெரிக்கா ஒரு தோற்றத்தைக் கொடுத்த நேரத்தில் உண்மையில் ஆப்கானில் அமெரிக்காவுக்கு இழப்பு அதிகம் என்பதையும், தாலிபன்களை வெல்ல முடியாமல் அமெரிக்கா தடுமாறுவதையும் இராணுவ ஆவணங்களை வெளியிட்டு உலகிற்குச் சொன்னார் அசாஞ்சே. ஒருவகையில் ஆப்கானிலிருந்து அமெரிக்க ராணுவம் வெளியேறுவதற்கான ஆரம்பப் புள்ளியை அதுவே போட்டது. இராக்கில் அமெரிக்க ராணுவம் நிகழ்த்திய அத்துமீறல்கள் தீவிரவாதிகளை ஒடுக்குகிறோம் என்ற பெயரில் குவான்டனாமோ சிறையில் அப்பாவிகளையும் அடைத்து வைத்து அமெரிக்க ராணுவம் செய்யும் சித்திரவதைகள் என்று விக்கிலீக்ஸ் வெளியிட்ட ஆவணங்கள் உலகையே அதிரவைத்தன. சீனாவில் அரசை எதிர்ப்பவர்கள் நசுக்கப்படும் விதத்தையும் அவர் அம்பலமாக்கினார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலுக்கான போட்டியில் ஜனநாயகக் கட்சித் தலைவர்கள் எப்படி பாரபட்சமாக நடந்துகொண்டார்கள் என்பதையும் சுமார் 27,000 ஆவணங்களை வெளியிட்டு அம்பலப்படுத்தியது விக்கிலீக்ஸ். போட்டியாளரான பெர்னி சாண்டர்ஸைப் பின்னுக்குத் தள்ளி ஹிலாரி கிளின்டன் வேட்பாளராக ஆவதற்கு கட்சித் தலைவர்கள் என்னென்ன செய்தார்கள் என்ற உண்மைகள் வெளியாகின. ஒருவகையில் ஜனாதிபதி தேர்தலில் ஹிலாரி தோற்று டொனால்ட் ட்ரம்ப் வெல்வதற்கு அது உதவியது.

அசாஞ்சேவை முன்னோடியாக எடுத்துக் கொண்டு அதன்பின் பலர் உருவானார்கள். அமெரிக்க இராணுவம் மக்களை எப்படிக் கண்காணிக்கிறது என்பதற்கான ரகசிய ஆவணங்களை வெளியிட்ட எட்வர்ட் ஸ்நோடன் ஓர் உதாரணம்.

அசாஞ்சேவைக் கைதுசெய்ய அமெரிக்கா துடித்தபோது, அவர் லண்டனில் இருக்கும் ஈக்வடார் நாட்டுத் தூதரகத்தில் அடைக்கலம் புகுந்தார். கிட்டத்தட்ட இந்த விவகாரம் மேற்கத்தேய வலதுசாரி அரசுகளுக்கும், பாதிக்கப்படும் எளிய நாடுகளின் மக்களுக்குமான போர் போல மாறியது. இதில் அசாஞ்சே அந்த மக்களின் குரல் போலத் தெரிந்தார். ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு ஈக்வடார் நாட்டுக்கும் அசாஞ்சேவுக்கும் கருத்து வேறுபாடு வந்தபோது, பிரிட்டிஷ் அரசு அவரைக் கைதுசெய்து லண்டனில் சிறையில் அடைத்தது. அமெரிக்காவின் நட்பு நாடாக இருந்தபோதும், தன் நாட்டின் புகழ்பெற்ற குடிமகனான அசாஞ்சேவைக் காப்பாற்ற வேண்டிய நெருக்கடி அவுஸ்திரேலியாவுக்கு ஏற்பட்டது. முடிவில்லாப் போர்கள் பலவற்றிலிருந்து வெளியேறியது போலவே இந்த விடயத்திலிருந்தும் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் அமெரிக்காவுக்கும் ஏற்பட்டது. அதன் விளைவாக அவர் இப்போது விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்.

விக்கிலீக்ஸ் பல ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்ட ஆவணங்கள் இப்போதுகூட தாக்கத்தை ஏற்படுத்திவருகின்றன. இந்த வாரம் நடந்த பிரிட்டிஷ் தேர்தலில் ஒரு கட்சி அறிவித்த வேட்பாளர் பற்றிய பழைய விக்கிலீக்ஸ் ஆவணங்கள் அந்தக் கட்சிக்கு சங்கடத்தை ஏற்படுத்த அவரை மாற்றிவிட்டது அந்தக் கட்சி. இப்படி ஆயிரக்கணக்கானவர்கள் முகம் அம்பலமாகிக் கிடக்கிறார்கள்.

இப்போதும் விக்கிலீக்ஸ் சிறிய அளவில் செயற்பட்டுவருகிறது. காசா போரில் பத்திரிகையாளர்கள் திட்டமிட்டுக் கொல்லப்பட்டது குறித்த புலனாய்வை 13 பத்திரிகையாளர்களுடன் இணைந்து அது செய்துவருகிறது. இப்படி சின்னச் சின்னதாக வேலைகளைச் செய்யும் விக்கிலீக்ஸுக்கு அசாஞ்சேவின் விடுதலை உயிர் கொடுக்குமா? "14 ஆண்டுத் தனிமை அவர் உடல்நலத்தை பாதித்திருக்கிறது. ஆனால், அவர் அபாரமான நெஞ்சுரமும் துணிச்சலும் கொண்டவர். அசாஞ்சே மீண்டு வருவார் என்கிறார்கள் அவர் நண்பர்கள்.

டுவிட்டரும் ஃபேஸ்புக்கும் பயன்பாட்டுக்கு வந்த அதே ஆண்டில்தான் விக்கிலீக்ஸ் தளத்தை ஆரம்பித்தார் அசாஞ்சே.

அந்த இரண்டு சோஷி யல் மீடியா நிறுவனங்களும் இன்று அடைந் திருக்கும் உயரங்களும் புகழும் வேறாக இருக் கலாம். ஆனால், அதிகாரத்துக்கு எதிரான உரி மைக்குரல் எழுப்பியவராக அசாஞ்சே எப்போதும் தனித்துத் தெரிவார்.

- ஜூனியர் விகடன்

ஒருவன் ஒரு ஜென் துறவியைத் தேடிப் போனான். வெகு நேரம் தன் கஷ்டங்களைச் சொல்லிப் புலம்பினான். அமைதியாகக் கேட்டுக்கொண்டார் துறவி. அவன் அமைதியானதும், "அதோ அந்த மூலையில் இருக்கே உப்பு ஜாடி... அதை எடுத்துக்கொண்டு வா" என்றார்.

அவன் ஜாடியை எடுத்து வந்தான். "அதுலிருந்து ஒரு கை உப்பை எடு" என்றார் துறவி. அவன் யோசனையோடு உப்பை அள்ளினான்.

துறவி, ஒரு தண்ணீர் நிரம்பிய டம்ளரை அவனிடம் நீட்டினார். "இதில் அந்த உப்பைப் போடு" என்றார். போட்டான். "இந்தத் தண்ணியைக் குடி" என்றார். குடித்தான். "எப்பிடியிருக்கிறது?" என்று கேட்டார் துறவி.

"நல்லா இல்லை. உப்புக் கரிக்குது."

இப்போது துறவி ஒரு கைப்பிடி உப்பை எடுத்துக்கொண்டார். அவனை அழைத்துக்கொண்டு அருகிலிருந்த ஏரிக்குப் போனார். உப்பை ஏரியில் போட்டார். "இப்போ தண்ணியை எடுத்துக் குடி" என்றார். அவன் இரு கைகளாலும் நீரை எடுத்துப் பருகினான்.

எப்படியிருக்கிறது?

நல்லாயிருக்கிறது.


"ஒரு கைப்பிடி உப்பு மாதிரிதான் பிரச்னைகளும். ஒரே அளவுதான். என்ன... நாம் அதை எப்படி, எதிலே எடுத்துக் கொள்கிறோம்" எனபதில் இருக்கிறது. பிரச்சினை வரும் போது அதற்கேற்ற மாதிரி அனுகப் பழகிக் கொள். அதை டம்ளர்ல போடாதே. ஏரியில் போடு."

டம்ளரிலும் போடாமல், ஏரியிலும் போடாமல் கடலில் போட்டுக் குடித்துப் பார்க்கும் சில அறிவு ஜீவிகளும் உண்டு. அவர்களை நாம் ஒன்றும் செய்ய முடியாது.

## வாழ்க்கைத் தத்துவம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரபாகரன் தொடர்பில் கல்வியமைச்சர் கூறியிருக்கும் கருத்துத் தொடர்பில்?

**மதுவன் — மீசாலை**

**பாராளுமன்ற அவசர கூட்டம் கூட்டியதற்கு ஒரு கோடி செலவாமே வியாசரே?**

பாராளுமன்றத்தை அவசரமாகக் கூட்டிய தற்கு ஒரு கோடி செலவு என்ற செய்தி அறிந்து வருந்தியவர்களில் நானும் ஒருவன். சரி, ஒரு கோடி செலவானாலும் பரவா யில்லை அதனால் ஏதும் பிரயோசனம் இருக்கிறது என்றால், அடக் கறுமம் அத னால் ஒரு சல்லி கூட பிரயோசனம் இல்லை. இதுதான் இன்றைய எம் அரசியல் சாணக் கியர்களின் வீரியம்.

தனக்குத் தனக்கு என்றால் சுளகு படக்கு படக்கு என்றுமாம் என்றொரு பழமொழி யுண்டல்லவா.

இதைக்கேள்விப்படும் போது அது தான் நினைவில் வந்தது.

**சுதன் — குப்பிளான்**

**பிரபாகரன் தொடர்பில் கல்வியமைச்சர் கூறியிருக்கும் கருத்துத் தொடர்பில்?**

கல்வி, கலை, கலாசாரம் பண்பாடு என் பதில் மிகக் கண்ணியம் காட்டியவர்கள் விடுதலைப் புலிகள். அதில் எவரும் குறை கூறி விட முடியாது.

தமிழர் பண்பாட்டு விழுமியங்களை கட்டிக் காப்பதிலும் அழிவடையாது பேணியதி லும் விடுதலைப்புலிகளின் பங்கு அதிகம் எனலாம்.

என்ன செய்வது. காலக் கொடுமை. அந்த வசந்த காலம் அழிந்துவிட்டது என்றே கூறவேண்டும்.

போர் சூழ்ந்த நிலம், எந்த நேரம் பொம்மர் வரும். குண்டு போடும். எந்த நேரம் செல் வந்து விழும். எப்போது எங்கிருந்து துப் பாக்கி ரவை சல்லடை போடும் என்ற பயம் இருந்ததுதான்.

ஆனால் அவை அனைத்தையும் விட நிம் மதியான வாழ்வு, மறக்க முடியாத அனு பவங்கள் என்று பலதும் உண்டு.

**மகாலட்சுமி — கொக்குவில்**

**கண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழும் இக்கால வாழ்க்கை பற் றிக் கூறுங்கள் வியாசரே?**

எப்போது மனித வாழ்வியலில் வீடுகள் பெருக்கத் தொடங்கியதோ அப்போதே எமது அந்நியோன்னியம்,பாசப் பிணைப்பு, அன்பு, ஒற்றுமை என்பன அழிந்துவிட்டன. சிறிய வீடு படுப்பதற்கு வசதியாக இடம் இல்லை.ஓலைப்பாய் விரித்து ஒன்றாய் ஒட்டியபடி படுத்தோம். அங்கே அன்பி ருந்தது அந்த அன்பில் தூய்மை இருந்தது. இப்போது அகல விரிந்த வீடு, ஆளுக் கொரு அறைஉறவுகளிடையே தூரத்தை ஏற்படுத்திவிட்டது.

இந்தத் தூரத்தை தொலைபேசி இன்னும் தூரமாக்கி, உறவுகளைப் பாரமாக்கி விட் டது.இதுதான் கண்டதே காட்சி கொண்டதே கோலம் போலும்.




**அன்பு வாசகர்களே! உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**

**076 097 3126**

**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**இளங்கோ — மானிப்பாய்**

**மக்களை உசுப்பேற்றி பின் அவர்களைக் காட் டிக் கொடுத்து அவர்கள் குருதியில் உல்லாசம் செய்வோர் மக்கள் தலைவர்களா?**

இது இவர்களுக்கு ஒன்றும் புதிதில்லையே. இதே போலத்தான் இளைஞர்களை உசுப் பேற்றி ஆயுதம் ஏந்தச் சொல்லித் தூண்டி விட்டு. இதற்கும் எமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அரசுடன் ஒட்டிநிற்க அது இளைஞர் களுக்கு கடுப்பை ஏற்ற இறுதியில் இரத்தக் களரியில் முடிந்த விடயம் உங்களுக்குத் தெரிந்தது தானே. அந்த மரபணு இன்றுவரை அரசியலில் தொடர்வது தான் பரிதாபம்.

**ஈஸ்வரன் — உரும்பிராய்**

**அப்பாவிப் பொது மக்கள் போரில் இறந்து போக, தமிழ் தேசிய ஜென்டில் மேன்கள் அவர் களது குடும்பத்துடன் சொகுசு வாழ்க்கை வாழ் கின்றனரே?**

தமிழ் தேசிய ஜென்டில்மேன்கள். அருமை யான சொற்பதம். இதை விட வேறு எந்த வார்த் தையை கூறினாலும் இவர்களுக்கு பொருந் தவே பொருந்தாது. அருமை அருமை.

தேர்தலுக்கு மட்டும் ஏதோ தமிழ் மக்கள் மீது பற்றுக் கொண்டவர்கள் போல குத்தி முறி வார்கள்.

அதன்பின் எந்த இடத்தில் நிழல் முதலாளியாய் இருந்து மதுபானசாலை நடத்தலாம்.

எந்த நேரத்தில் வாகனப் போமிட்டைப் பெற்று கோடிக்கு விற்று காசு பார்க்கலாம்.இப்படிப் பட் டவர்கள் தான் தமிழ் தேசிய ஜென்டில்மேன்கள்.



பணத்தின் மீது தன் காதலியை நடக்க வைத்த தொழிலதிபர் செர்ஜி கோசென்கோ பற்றி?

**விஜயதரன் — உரும்பிராய்**

**அண்மைக் காலமாக யாழ்ப்பாணத்தில் இளவயது மரணங்கள் அதிகளவில் பதிவாகியுள்ளதே வியாசரே?**

கலியுகத்தில் உலகம் அழியப் போகிறது என் கிறது ஆன்மிகம். உண்மை. தொலைபேசிப் பாவனை மனித வாழ்வைச் சீரழிக்கிறது.

அதிவேக வாகனப் பயணங்கள் வீதி விபத்துக் களை ஏற்படுத்தி மரணங்களை ஏற்படுத்து கின்றன.

போதைவஸ்துப் பாவனை மனித வாழ்வின் எல்லையை நிர்ணயித்துவிட்டன. மனித செயற்பாட்டினால் இயற்கை குழம்பிப் போய் கத்தரி வெயிலில் மாரி மழை கொட்டு கிறது.

மார்கழிக்கு வெயில் சுட்டெரிக்கிறது.

நீ பெரிது, நான் பெரிது என போர் கொண்டு, போரிட்டு மடிந்து கொண்டிருக்கின்றன மனித உயிர்கள். இவை அனைத்தும் கலியுகத்தின் வெளிப்பாடே.

**கணேஸ் — பருத்தித்துறை**

**பணத்தின் மீது தன் காதலியை நடக்க வைத்த தொழிலதிபர் செர்ஜி கோசென்கோ பற்றி?**

ஒரு விடயத்தைப் புரிந்து கொள்ள வேண் டும்.பற்றறுத்தவர்கள் பணத்தை மிதிக்கலாம், கிழிக்கலாம் அது வெறும் கடதாசி என்று மறுக்கலாம்.

ஆனால் பற்றறுக்காமல் இன்றுவரை பணம் தேடும் வழிகளைத் திறந்து கொண்டு இது வெறும் கடதாசி என்று கதைப்பதில் ஜதார்த்தம் இல்லை.

பணம் மனித வாழ்க்கைக்கு இன்றியமை யாத ஒன்று. அதை எப்படிக் கையாள்கிறோம் என்பதில்தான் சூட்சுமமே இருக்கிறது.

பதவி, புகழ் தேடி பணம் கொடுக்க நினை த்தால் கடைசிக் காலத்தில் கால் கிலோ சீனி வாங்கக்கூட காசில்லாமல் கரைச்சல் பட வேண்டி வரும்.

**டனுசாந்ராசா — திருநெல்வேலி**

**பிரபாகரனால் பெற்றுத் தர முடியாத தமி ழீழத்தை வேறு யாராலும் பெற்றுத்தர முடியாது என்கிறாரே பாராளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன்?**

ஆனால் தேர்தல் காலம் வந்தால் இழந்த தமிழினத்தின் சுதந்திரத்தை மீட்டெடுக்க. பறிபோன எமது மண்ணை மீட்டெடுக்க.


சுரண்டப்படும் எமது வளங்களை மீண்டும் பெற்றுக் கொள்ள.

தமிழினத்தின் முதுகுகளில் சுமத்தியிருக்கும் சுமையை இறக்கி வைக்க. உண்மை, நேர்மை, தூரநோக்குப் பார்வை கொண்ட எமக்கு வாக்களியுங்கள் என்று வாய் கிழியக் கத்துவது ஏன்?

இனியொரு தலைவன் தமிழினத்துக்குக் கிடைக்கப் போவதில்லை. அப்படிக் கிடைப்ப தாக இருந்தால் அது தமிழினத்தின் அடுத்த ஜென்மமாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## இப்ப களைகட்டி இருக்கிறது சாவகச்சேரி வைத்தியசாலை

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர். இறை வணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார். இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமாகிய இரா. சம்பந்தர் அவர்கள் காலமாகிவிட்டார்.

அவருக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல்கொடுத்தார்.

**விதானையார்:-** சாவகச்சேரி வைத்தியசாலையில நடக்கிற சம்பவம் தொடர்பில நாங்கள் நிச்சயம் கதைத்துத் தானாக வேண்டும்.

இவ்வாறு கூறியபடி விதானையார் விசுவலிங்கம் மாநாட்டுத் தலைவர் வாத்தியாரைப் பார்க்க, அவர் தலையசைத்துச் சம்மதம் தெரிவித்தார்.

**கங்காணி:-** அது சரி சாவகச்சேரி வைத்தியசாலையில புதிதாகப் பதவியேற்றுள்ள மருத்துவ அதிகாரி, அங்குள்ள பிரச்சினைகளை முன்வைத்தும் சில மருத்துவர்களின் பெயர்களைக் கூறி அவர்கள் வைத்தியசாலை இயங்குவதற்குப் பெருந்தடையாக இருப்பதாகவும் செய்தி வெளியிட்டிருந்தார்.

அவ்வாறு தான் செய்தி வெளியிட்டதும் தன்னை மருத்துவர்கள் சிலர் வைத்தியசாலைக்குள் நுழைந்து தாக்கினதாகவும் அவர் ஒரு செய்தியைப் பதிவு செய்துள்ளார்.

**சாத்திரியார்:-** ஒரு காலத்தில மருத்துவர்களை எங்கட சனங்கள் கையெடுத்துக் கும்பிட்டினம். அந்தளவுக்கு அவர்களைக் கடவுளாகக் கருதிப் போற்றினார்கள்.

அதுக்கேற்றால் போல அந்தக் காலத்து மருத்துவர்களும் தெய்வங்களாக நடமாடிச்சினம் ஆனால் இப்ப...

**சிறாப்பர்:-** இப்பவும் தெய்வங்களுக்கு ஈடான மருத்துவர்கள் நம் மத்தியில இருக்கினம்.

ஆனால் அவர்களால எதுவும் செய்ய முடியாத அளவில சில மருத்துவர்கள் அதிகார வர்க்கத்தோட சேர்ந்து மருத்துவ சேவையை வியாபாரப் பொருளாக்கிவிட்டினம்.

**வாத்தியார்:-** என்னைப் பொறுத்த வரை முதலில் நாங்கள் பழிபாவத்துக்குப் பயப்பிட வேணும்.

இவ்வளவு மக்கள் தொகையில நான் ஒரு மருத்துவரா்க இருக்கிறன் எண்டால் அது எனக்குக் கடவுள் தந்த வரப்பிரசாதம். என்ர தாய், தந்தையர் செய்த புண்ணியம்.

அதற்கு ஏற்றால் போல் நான் மக்களுக்குச் சேவையாற்ற வேணும் எண்டு நினைக்க வேணும். இதைவிட்டுட்டு நான் ஒரு டாக்டர், என்னை எவரும் எதுவும் செய்ய ஏலாது எண்டு நினைத்தால், அவ்வளவு தான்.

**விதானையார்:-** வாத்தியார் சொல்லுறது நூறு வீதம் உண்மை தான்.

ஆனால் நிர்வாக அதிகாரத்தில இருக்கிற சில மருத்துவர்கள் தங்களுக்குச் சார்பான மருத்துவர்களுக்கு எல்லா வளங்களையும் வசதிகளையும் கொடுத்து விட்டு, சில மருத்துவர்களை வஞ்சிக்கிற வேலையைச் செய்யினம்.

**மூப்பர்:-** அதெண்டால் உண்மைதான். வைத்தியசாலையில தியேட்டர் கொடுக்காமல் விட்டதாலயும் மருத்துவர்களுக்கான அறை கொடுக்க மறுத்ததாலயும் இஞ்ச இருந்து வெளிக்கிட்ட மருத்துவர்களும் இருக்கினம்.

**கங்காணி:-** ஓ! எங்கட யாழ்ப்பாணத்தில எவ்வளவு தான் படித்தாலும் சிலரிட்ட, மற்றவர்களை அறுத்துக் கழுவுகிற குணம் மட்டும் கடைசி வரைக்கும் போகாது.

**சிறாப்பர்:-** எது எப்படியா இருந்தாலும் சாவகச்சேரி வைத்தியசாலையில புதிதாகப் பதவியேற்ற மருத்துவர் முன்வைத்த விடயங்களுக்கு யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் விளக்கம் கொடுத்தே ஆகவேணும்.

உண்மையில சாவகச்சேரி வைத்தியசாலை என்பது தென்மராட்சி மக்களின்ர ஒரு பெரும் சொத்து.

ஒவ்வொரு பிரதேச வைத்தியசாலைகளும் செம்மையாக இயங்குமாயின், யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைக்கு வருகிற நோயாளர்களைக் கணிசமாகக் குறைக்க முடியும்.

ஆனால் சாவகச்சேரி வைத்தியசாலை பொறுப்பதிகாரியின்ர செய்தியின் பிரகாரம், சாவகச்சேரி வைத்தியசாலையில பிரசவத்திற்குக் கூட அடிப்படை வசதிகள் இல்லை.

இதுதவிர, சிறு சத்திர சிகிச்சை செய்வதற்கான தியேட்டர் இருந்தும் அது பூட்டிக்கிடக்கிறது என்றெல்லாம் குறித்த வைத்திய அதிகாரி சொல்லியிருக்கிறார்.

அவர் சொல்லுறது உண்மை எண்டு தென்மராட்சி மக்களும் சொல்லுகினம். அப்படியானால் யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களம் உரிய நடவடிக்கை எடுக்கவில்லையா என்ற கேள்வி எழும்.

எனவே மருத்துவர்கள் ஒருவரை ஒருவர் மட்டம் தட்டுறதை விட்டிட்டு நோயாளர்களுக்கு கண்ணியமான சேவையை வழங்க முன்வர வேணும்.

இவ்வாறு சிறாப்பர் கனகசபை நீண்ட நேரம் கருத்துரைக்க ஆலடியில் நிசப்தம் நிலவியது.

நிசப்தத்தைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.

**வாத்தியார்:-** எங்கட மருத்துவ சேவை தொடர்பில பல்வேறு குறைபாடுகள் பொது மக்களால முன்வைக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பில உரிய மருத்துவ அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேணும்.

இவ்வாறு வாத்தியார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# களம் பல கண்ட யாழ் கோட்டை



18 செங்கை ஆழியான்

எனவே ஒல்லாந்தர் பாலிற்கென மாடுகளை வாங்கி, யாழ்ப்பாணக் கோட்டையில் அடைத்து. தேவையான போது அவற்றினை வெட்டி உண்டனர். இந்த உண்மை வெளியில் தெரிந்ததும் ஒல்லாந்தருக்கு யாழ்ப்பாண மக்கள் மாடுகளை விற்க முன்வரவில்லை. அதனால் ஒரு வருடத்தில் ஒருவர் ஒரு மாடு வீதம் தங்களுக்கு இறை செலுத்த வேண்டுமென ஒல்லாந்தக் கொமுசாறி கட்டளையிட்டான்.


அவனது கட்டளைக்குப் பணிந்து யாழ்ப்பாண மக்கள் ஒவ்வொருவரும் வருடத்திற்கு ஒரு மாடு வீதம் யாழ்ப்பாணக் கோட்டைக்கு அனுப்பிவைத்தனர் இதற்கு இணங்காத பலர் தண்டனைக்குப் பயந்து இந்தியாவிற்குச் சென்றனர்.

யாழ்ப்பாணத்தில் அரச உத்தியோகம் பார்த்த சண்முகநாத முதலியார் என்பவரிடம் ஒல்லாந்தக் கொமுசாறி ஒருநாள், விருந்தொன்றிற்கு நல்லதொரு காளைக்கன்று வேண்டுமெனக் கேட்டான். அதனால் சண்முகநாத முதலியார் தனது பதவியை உதறியெறிந்தார். திருநெல்வேலியில் வாழ்ந்த ஞானப்பிரகாசர் என்ற சைவர், ஒல்லாந்தருக்குப் பசுவொன்றினை வழங்கும் முறை வந்தபோது அனைத்தையும் துறந்து இந்தியாவிற்கு ஓடிச்சென்று சிதம்பரத்தில் துறவு பூண்டார். சிதப்பரத்தில் ஞானப்பிரகாசர் குளம் என்ற திருக்குளத்தை அமைப்பித்தவ ரிலோ வரணி தில்லைநாதர் என்பவரும் ஒல்லாந்தருக்கு மாடு கொடுக்க மறுத்துச் சிதம்பரத்துக்கு ஓடிச் சென்றார். இவ்வாறு பல சைவர்கள் ஒல்லாந்தரின் கட்டளைக்கு பணியாது இந்தியாவிற்கு விலகிச் சென்றிருக்கின்றனர்.

ஒல்லாந்தர் காலத்தில் நிலவிய நிர்வாகப் பிரிவுகளில் மிகப் பெரியதாக யாழ்ப்பாணக் கொமாண்டரி விளங்கியது. கொழும்பு, காலி ஆகிய என இரு கொமாண்டரிகளும் பரப்பில் சிறிய ஆள்புலங்களாக இருந்தன. கொழும்புப் பிரிவு மகாஓயாவிலிருந்து பெந்தோட்டை நதிவரை எட்டுக் கோறளைகளைக் கொண்டு விளங்கியது. யாழ்ப்பாணப் பிரிவு சிலாபத்திலிருந்து தொடங்கி மன்னாரை உள்ளடக்கி வன்னிப் பிரதேசம், யாழ்ப்பாணக் குடாநாடு என்பனவற்றைக் கொண்டதாக, முல்லைத்தீவு. திருகோணமலை. மட்டக்களப்பு, அம்பாறை வரை பரந்தமைந்திருந்தது. இலங்கையின் வடபகுதி முழுவதையும் கொண்டதாகவும் கிழக்கு மாகாணம் முழுவதையும் கொண்டதாகவும் விளங்கியது.

(தொடரும்...)

# கடல் புறா




அன்று பௌர்ணமி கழிந்து நாட்கள் ஏழு ஆகிவிட்டதால் பதின்னான்கு நாழிகைகளுக்குப் பின்பே கிருஷ்ணபக்ஷத்துச் சந்திரன் தலைகாட்ட முடியுமாகையாலும், ஆந்தைகள் இரண்டு பலமாக அலறிய அந்தச் சமயம் சுத்த நள்ளிரவாய், பன்னிரண்டு நாழிகைகளையே அடைந்திருந்ததாலும் அக்ஷய முனைப் பிராந்தியம் முழுவதும் பூர்ண இருளில் சிக்கியிருந்ததன் விளைவாக ஆந்தைகளின் அலறல் மிகப் பயங்கரமாக இளையபல்லவன் காதுகளில் விழுந்தது.

ஏழு நாள்களுக்கு முன்பு சித்ராபௌர்ணமி அன்று பலவர்மனைப் பயங்கரமாக எச்சரித்து விட்டுப் போன வில்வலனோ, அவனைச் சேர்ந்த இதர பூர்வகுடி வீரர்களோ அக்ஷயமுனையில் தலைகாட்டாதிருந்ததைப் பற்றி ஆழ்ந்த யோசனையிலிருந்த இளைய பல்லவன் திடீரெனப் புது யோசனை உதயமாகவே அதைப் பற்றிய சிந்தனையில் லயித்திருந்தானாகையால், முதல் முறை ஆந்தையின் அலறல் கேட்டதும் அதை அவ்வளவாகக் கவனிக்கவில்லையானாலும் இரண்டாம் முறை அதேவித அலறல் கேட்டதும் சற்றுக் காதுகளை நன்றாகத் தீட்டிக்கொண்டு அறையை விட்டு வெளியிலும் சென்றான்.

அறையை விட்டு வெளியே வந்து தாழ்வரைக் கைப்பிடிச் சுவரின் ஓரமாக நடந்து சுற்று முற்றும் பார்த்த இளைய பல்லவன் காவலர் எச்சரிக்கைக் கூச்சலைத் தவிர வேறெந்த சத்தமும் எந்த இடத்திலும் கேட்காமல் ஊர் அடங்கிக் கிடக்கவே, ஆந்தையின் அலறலைக் கேட்டுத் தான் கலங்கியது வீண் பிரமையென்று நினைத்து மீண்டும் அறைக்குச் சென்று மஞ்சத்தில் படுத்துக் கொண்டான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் மாடிப்படிகளைக் காவல் செய்து கொண்டிருந்த இரு வீரர்களையும் விளித்து, "நீங்களும் உறங்கச் செல்லலாம். இனி காவல் தேவையில்லை" என்று பஞ்சணையில் படுத்தவண்ணமே இரைந்து கூறிவிட்டுப் போர்வையை நன்றாக இழுத்துத் தலைவரையில் போர்த்துக்கொண்டு நித்திரையில் ஆழ்ந்தான்.

ஆனால் அதே ஆந்தையின் அலறலைக் கேட்டதும் தலையை முக்காடிட்டும் உடலையும் போர்த்து மறைத்துக் கொண்டு மாளிகையின் பின்புறத் தோட்டத்துக்குச் சென்ற பலவர்மன் மரத்து நிழலில் மறைந்து நின்ற ஒரு மனிதனை அணுகியதன்றி அவனுக்கு நல்வரவும் கூறினான். அந்த நல்வரவை ஏற்காமலும் தலையைச் சிறிதும்

## அன்பின் வழி

வணங்காமலும் மிகவும் முரட்டுத்தனமாக நின்ற அந்த மனிதன் அக்ஷய முனைக் கோட்டைத் தலைவன் காதுக்கோ, எண்ணத்துக்கோ சிறிதும் இணங்காத சொற்களைப் பிரயோகிக்கத் துவங்கினான்.

"என்னை எதற்காக இங்கு வரவழைத்தாய் பலவர்மா?" என்ற அவனது ஆரம்பக் கேள்வியில் மரியாதை இல்லாதது மட்டுமல்ல, வெறுப்பும் குரோதமும் மண்டிக் கிடந்தது.

வந்தவன், கிட்டத்தட்ட பலவர்மனுடைய உயரத்தையும், பருமனையும் வயதையும் உடையவனாயிருந்தாலும் அவன் வஞ்சகமோ தந்திர புத்தியோ அற்ற வெறும் முரடனென்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது. அப்படி வஞ்சகனல்லாவிட்டாலும் நெஞ்சத் துணிவிலும் வாள் போரிலும் அவன் யாருக்கும் சளைத்தவனல்லவென்பதை இருட்டிலும் பளபளத்த அவனது கூரிய கண்களும், இடுப்பில் தொங்கிக் கொண்டிருந்த நீண்ட வாளும் பறைசாற்றின. அவன் உடை பூராவும் ஏதோ ஒருவகைத் தோலால் செய்யப்பட்டிருந்தாலும் அந்தத் தோலில் தைக்கப்பட்டிருந்த விலை உயர்ந்த கற்களும், சரிகை வேலைப்பாடும் வந்தவனுக்குச் செல்வப் பஞ்சம் ஏதும் கிடையாதென்பதை வலியுறுத்தின. அவன் பெருமீசை பயங்கரமாயிருந்தது. குரல் அதை விடப் பயங்கரமாக ஒலித்தது. முதல் கேள்விக்குப் பலவர்மன் பதில்சொல்லாது போகவே? "என்னை வரவழைத்தற்குக் காரணம் என்ன பலவர்மா?" என்று மீண்டும் ஒருமுறை கேள்வியைத் திருப்பினான் வந்தவன் இரைந்து.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முயற்சியும் நம்பிக்கையும்

காத்திருக்கும் கூடுகளின்
விருப்பையேற்று
பறவைகள் கூடடைகின்றன..
பறவைகளின் அழைப்பையேற்று
பின்தொடரும் காற்று
அந்தி நேர ஆலாபனையை
காதுகளில் இசைக்கிறது..


முடிவற்ற காலம் ஒன்று
எங்கிருந்தோ வந்து
அதன் சிறகுகளை அசைத்துவிடுகிறது..
இளைப்பாறல் என்பதே
இடைவேளையாக
பயிற்றுவிக்கப் பட்டிருக்கின்றன
பறவைகளுக்கு..

ஏதோவொரு பறவை தவறவிட்ட
முயற்சியிலிருந்து உதிர்கின்றன
நம்பிக்கை சிறகுகளாக..
அதை எறும்புகள் பிண ஊர்வலமாய்
தூக்கி அலைகின்றன..
நிற்காமல் வீசும் காற்று
இருத்தலை பறத்தலென
மொழிபெயர்க்கிறது..

ஒரு மாயா ஜால வித்தைக்காரனின்
கைப்பிரம்பின் ஜாலம்
வெற்றுப்பாத்திரத்திலிருந்து
புறாக்களை பறக்கவிடலாம்..
ஆனால்
வாழ்க்கையில் முயற்சி என்பது
உள்ளிருக்கும் காற்றாய்
நம்பிக்கை என்பது
உடற்கூற்றாய்
நிறைந்திருக்க வேண்டும்..

சங்கரி சிவகணேசன்

## சாபக்கேடு




வறண்டு போன வாக்குறுதிகள்
புளித்து போன பொய்யுரைகள்
உருப்படாத உறுதிமொழிகள்
என மீண்டுமொரு வலைவிரிப்பு
தமிழர் நம் வாக்கு வேட்டைக்காய்
அருவெறுப்பான அரசியலில்
அடங்காத ஆசை கொண்ட
வீணர்களின் வஞ்சகப் பொறியில்
வீழ்வதே நமது வரலாறாய்
போனதெல்லாம்
நம்மவர் நலத்திற்கானதே
போரில் புதைந்து
தலைமையே இல்லாமல்
தாழ்ந்து போகும்
இந்தத் தருணத்தில் கூட
ஒற்றுமையை ஒழித்து வைத்து
விட்டுக்கொடுப்பு
அர்ப்பணிப்பு என ஒப்புக்கு ஓலமிட்டு
தேறாத தேர்தல் திருவிழாவில்
தேன்நிலவு காணத்துடிக்கும்
முகவரி தொலைத்த முகங்களை
இனியாவது சுயநலத்தைச் சுட்டெரித்து
சாபங்களைச் சாகடித்து
நம்மினத்திற்கு முடிசூட்டக்கூடாதா

தேன்நிலா


## இலவசமாக எதுவுமில்லை

மின்சாரம் இலவசமில்லை
குடிநீர் இலவசமில்லை
கல்வியோ கைவசமில்லை
கண்ணீரோ கண்களிலில்லை
உணவிலோ கலப்படம்
உடைகளோ விளம்பரம்
பழங்களோ பழரசம்
துயரமோ எம்வசம்
தூக்கமோ கண்களிலில்லை
பணங்களோ கைகளிலில்லை
பசியோ உடம்பிலில்லை
மகிழ்வோ உள்ளத்திலில்லை
பசியும், தூக்கத்தையும்
மகிழ்வையும் கடன் வாங்கியோ
வாழ்கின்றோம்
இந்நிலை மாறாதோ!
இலவசமாகக் கண்ணீரும் வராதோ!
கேள்வி கேள் உன்னிடத்தில் அல்ல
நாட்டை ஆளும் அரசாங்கத்திடம்...

அருளப்பு ஞானப்பிரகாசம்,
கரம்பொன், ஊர்காற்றுறை.




## மௌனத்தின் தேடல்-723



## பரிதாபம்

உணவைக் காட்டி உயிரை எடுக்கும்
மனிதகுலம் மிருக குணமே!
மனித மிருகங்கள்
இவ்வுலகில் இருக்கும்வரை
ஒன்றைக் காட்டி இன்னொன்றைப் பறிக்கும்
கீழ்த்தர செயல் நடந்து கொண்டே இருக்கும்

ச.கன்சிகா

## மௌனத்தின் தேடல்- 724



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

## பொறியா? யாருக்கு

தலைக்கவசம் தாங்கிய எலியாரே
தங்களைத் தான் பொறி
எதிர்பார்க்கிறது.
எலியாருக்கு புரிந்துவிட்டது
போலும் பொறிக்குள்
அகப்படாமல் தவறிக்கொள்ள
எடுக்கின்றது யோசனை
புத்திசாலி எலி பொறியை
ஏமாற்றி விடும் நிச்சயம்
எப்படியான பொறிகள்
வைப்பினும் தவறிக்கொள்ள
புத்தியை கூராக்குவோம்

அபி குலமாலிகா, சித்தன்கேணி.

## சிரசே பிரதானம்

எண்சாண் உடம்பிற்கு
என்றும் சிரசே பிரதானம்
தர்மம் தலை காத்து உயிரையும்
தக்க சமயத்தில் காக்குமென்பது
தலைக்கவசத்திற்கும் பொருந்தும்
எலிக்காய்ச்சல் பீதிப் பரப்பரப்பால்
வெளியே தலை காட்ட முடியாத போது
நிலை மாற உதவியதும் கவசமே
விரும்பாமல் விருந்துக்கழைப்பதையும்
விருப்புடன் ஏற்கமுடியவில்லை
நின்று சிந்தித்து செயற்படும் தந்திரம்
என்றும் உயிர் காத்திடும் மந்திரம்

க.நாகராசா, நுணாவில்.

## தற்பாதுகாப்பு

வீட்டுக்குள் இருக்கும் எலியென்று
எள்ளி நகையாடதே
மனிதா நீ வைக்கும் பொறிக்குள் அகப்பட்டு
மரணிக்காமல் இருக்க
தலைக்கவசம் போட்டுவிட்டேனே
கலியுகக் காலமதில்
காலனின் பிடியில் அகப்படாது
எலி நானும் தப்பிக்க
வழியது கண்டுபிடித்து விட்டேனே
ஐந்தறிவு படைத்த நானே
உயிரைப் பாதுகாக்கும் போது
ஆறறிவு படைத்த நீ
தலைக்கவசம் இன்றி செல்லுதல் முறையோ?
வீதிப் போக்குவரத்து சட்டத்தை மதிக்கப் பழகிக்கொள்
விதியோடு விளையாடினால்
வினையாகிப் போய்விடுமே
மதிகெட்ட மானுடனே நீயும்
தலைக்கவசம் அணிந்து உன் உயிரைத் தற்காத்து
தரணியில் உயர்ந்து நில்

ஆ.செல்வி, திருநாவலூர்

## சுண்டெலியாரின் யோசனை

தலைக்கவசத்துடன் வெளியே புறப்பட்ட எலியார் பொறியிலுள்ள கருவாட்டு வாசனையால்
ஈர்க்கப்பட்டவராய் பொறியடிக்கு வந்தாராம் கருவாடோ
பொறிக்குள்ளே உள் நுழைந்தால் தலையும் தப்பாது
கருவாருடும் கிட்டாதே யென எண்ணியபடி செய்வதறியாது ஆழந்த யோசனையில்
அமிழ்ந்து விட்டார் எலியாரும்

சி.மகாலட்சுமி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: எங்கிருந்தோ வந்தாள்
பாடியவர்: டி.எம். சௌந்தரராஜன்
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: எம்.எஸ். விஸ்வநாதன்



ஆ ஆஆஆஆ ஆஆஆஆஆ
ஆ ஆஆஆஆ ஆஆஆஆஆ

ஒரே பாடல் உன்னை அழைக்கும்
உன்தன் உள்ளம் என்னை நினைக்கும்
ஒரே பாடல் உன்னை அழைக்கும்
உன்தன் உள்ளம் என்னை நினைக்கும்
ஒரே பாடல்

காதல் கிளிகள் பறந்த காலம்
கண்ணில் தெரியும் நெஞ்சம் உருகும்
காதல் கிளிகள் பறந்த காலம்
கண்ணில் தெரியும் நெஞ்சம் உருகும்
கண்ணீர் கலங்கி கண்ணில் இறங்கி
கண்ணீர் கலங்கி கண்ணில் இறங்கி
நெஞ்சில் விழுந்தால் சொந்தம் புரியும்
நெஞ்சில் விழுந்தால் சொந்தம் புரியும்

ஒரே பாடல் உன்னை அழைக்கும்
உன்தன் உள்ளம் என்னை நினைக்கும்
ஒரே பாடல்

உன்னையறிந்தேன் என்னைக் கொடுத்தேன்
உள்ளம் முழுதும் எண்ணம் வளர்த்தேன்
உன்னையறிந்தேன் என்னைக் கொடுத்தேன்
உள்ளம் முழுதும் எண்ணம் வளர்த்தேன்
உன்னை நினைத்தே உலகில் இருந்தேன்
உன்னைப் பிரிந்தேன் என்னை மறந்தேன்
உன்னை நினைத்தே உலகில் இருந்தேன்
உன்னைப் பிரிந்தேன் என்னை மறந்தேன்

ஒரே பாடல் உன்னை அழைக்கும்
உன்தன் உள்ளம் என்னை நினைக்கும்
ஒரே பாடல்

# கல்கி 2898 AD: மெ(வி)ஞ்ஞான மகாபாரதம்!

குருஷேத்திரப் போரில் தோற்றுவிட்ட பிறகு துரோணரின் மகன் அஸ்வத்தாமன், தன்னைக் கொன்றுவிடும்படி கிருஷ்ணரிடம் மன்றாடுகிறான். கிருஷ்ணரோ "உன் பாவங்களுக்கான விமோசனம் 6,000 ஆண்டுகளுக்கு அப்பால் கலியுகத்தின் முடிவில் இருக்கிறது. அங்கே நான் மீண்டும் குழந்தையாகப் பிறப்பேன். நான் பிறக்கும் வரை எனக்குக் காவலாக இரு!" என்று சொல்லிவிடுகிறார். விஷ்ணுவின் பத்தாம் வருகைக்காக - கல்கிக்காகக் காத்திருக்கிறான் அஸ்வத்தாமன்.

சிறுவயதில் கேட்டு, பார்த்துப் பரவசமடைந்த மகாபாரத புராணக் காட்சிகளை AI மற்றும் கிராபிக்ஸ் உதவியுடன் மிரட்டலாகப் படத்தின் தொடக்கத்திலும் முடிவிலும் சேர்த்திருக்கிறார் இயக்குநர் நாக் அஷ்வின். தசாவதாரத்தில் பத்தாவது அவதாரமான கல்கியின் புராணத்தை 2898 ஆம் ஆண்டு நடப்பதாக, ஒரு அறிவியல் புனைகதையாகச் சித்திரித்திருக்கிறது இந்த 'கல்கி 2898 AD. 600 கோடி ரூபாய் பிரமாண்டம், பிரபாஸ், அமிதாப் பச்சன், கமல்ஹாசன், தீபிகா படுகோன் உள்ளிட்ட உச்ச நட்சத்திரங்களின் பங்களிப்பு எனப் பெரும் எதிர்பார்ப்புடன் 3டி மற்றும் ஐமேக்ஸ் தொழில்நுட்பத்தில் பேன் இந்தியா படமாக வெளியாகியிருக்கிறது இந்தப் படைப்பு.

உலகின் முதல் நகரமாகச் சொல்லப்படும் காசி தற்போது கடைசி நகரமாக எஞ்சி நிற்கிறது. 'காம்ப்ளக்ஸ்' என அந்தரத்தில் மிதக்கும் பெரும் கட்டுமானத்தின் அரண்மனையில் வாழும் சுப்ரீம் யாஸ்கின் (கமல்ஹாசன்) ஒட்டுமொத்த உலகுக்கும் சர்வாதிகாரியாக இருக்கிறார். 'காம்ப்ளக்"ஸ"க்கு ஏவல் பணியைச் செய்யும் பைரவாவுக்கு (பிரபாஸ்) நிறைய யூனிட்களைச் சம்பாதித்து (டிஜிற்றல் கரன்சி) காம்ப்ளக்ஸில் போய் செட்டிலாவதே லட்சியம். தன்னுடைய புஜ்ஜி எனும் மிரட்டலான AI காரின் (குரல் - கீர்த்தி சுரேஷ்) உதவியுடன் சுற்றித் திரிகிறான். இதனிடையே சுப்ரீம் யாஸ்கின் கர்ப்பிணிப் பெண்களை வைத்து 'புரொஜெக்ட் K" என்ற விநோதமான ஆராய்ச்சியைச் செய்துவருகிறார். அந்த ஆய்வுக்கூடத்திலிருந்து தப்பிக்கும் கர்ப்பிணியான SUM-80 எனும் சுமதியின் (தீபிகா படுகோன்) பாதையில் குறுக்கிடுகிறான் பைரவா. மற்றொரு பக்கம் காம்ப்ளக்ஸை எதிர்க்கும் புரட்சிப்படைக் கூட்டமான ஷோபனா, பசுபதி, அன்னா பென் அடங்கிய குழு சுமதியைப் பாதுகாக்க நினைக்கிறது. ஆபத்துகள் சூழ பல ஆயிரம் வருடங்களாகச் சாகாமல் இருக்கும் அஸ்வத்தாமனும் (அமிதாப் பச்சன்) சுமதியைக் காக்கக் களமிறங்குகிறார். இதில் வெற்றி யாருக்கு என்பதே இந்த முதல் பாகத் தின் கதை.

நடித்திருப்பவர்கள் அனைவருமே பரிச்சயப்பட்ட அனுபவசாலிகள் என்பதால் அதில் குறை சொல்ல எதுவுமில்லை. பிரபாஸ், பிரபாஸாகவே தெரிவது மட்டும் ஒரே குறை. கீர்த்தி சுரேஷ் குரலுடனான அவரின் கலாட்டாக்கள் ஆறுதல். அதே வகையில் தன் குரலாலேயே மிரட்டும் மற்றொரு பாத்திரமாக உலகநாயகன் கமல்ஹாசன் பிரமாண்ட வில்லத்தனத்தைக் காட்டியிருக்கிறார். ஐந்து நிமிடங்களே வந்தாலும் அவருடைய குரல் அசரீரியாகப் படம் முழுக்கவே ஒலிக்கிறது. இந்த 'கல்கி' யுனிவர்ஸின் முதல் பாகத்தின் நாயகன், சந்தேகமே இல்லாமல் அமிதாப் பச்சன்தான். கூடுதல் மேக்கப், வயதானாலும் தளராத உடல்மொழி, திரையை ஆக்கிரமிக்கும் நடிப்பு என அசரவைத்திருக்கிறார். நாயகியாக தீபிகா படுகோன், மற்றொரு வில்லனாக சஸ்வதா சேட்டர்ஜி தேவையான உணர்வுகளைக் கடத்தியிருக்கிறார்கள். ஷோபனா, பசுபதி, அன்னா பென், பிரம்மானந்தம் போன்றவர்களுக்குக் குறைவான நேரமே என்றாலும் அவர்களில் அன்னா பென் மட்டும் நம் மனதில் ஆழப் பதிகிறார்.

இவர்கள் போதாதென துல்கர் சல்மான், விஜய் தேவரகொண்டா, மிருணாள் தாக்கூர், இயக்குநர் ராம் கோபால் வர்மா, ராஜமௌலி, அனுதீப் என ஒரு லாரி ஆட்களைக் காட்சிக்குக் காட்சி கேமியோவில் வரவைத்திருக்கிறார்கள்.

தொழில்நுட்ப ரீதியாக நிச்சயமாக தன் அடுத்த கட்டப் பாய்ச்சலுக்குச் சென்றிருக்கிறது இந்திய சினிமா. பிசிர் இல்லாமல் அசத்தலான வரைகலை மூலம் பிரமாண்ட உலகத்தை உருவாக்கியிருக்கிறார்கள். ஜோர்ட்ஜே ஸ்டோஜில்கோவிச்சின் ஒளிப்பதிவு, கோத்தகிரி வெங்கடேசுவர ராவின் படத்தொகுப்பு, சந்தோஷ் நாராயணனின் பின்னணி இசை என அனைத்துமே இயக்குநர் நாக் அஸ்வினின் திட்டத்துக்குப் பிரமாதமாக உயிர்கொடுத் திருக்கின்றன. குறிப்பாகப் படத்தின் தயாரிப்பு வடிவமைப்பாளரான நிதின் ஜிஹானி சௌத் ரியின் உழைப்பு பல ஆண்டுகளுக்குப் பேசப்படும்.

கிராப்ட்டாக (Craft) சாதித்த இயக்குநர் நாக் அஸ்வின், டிராப்ட் என்னும் எழுத்தில்தான் சறுக்கியிருக்கிறார். நீண்டுகொண்டே செல்லும் முதல் பாதியில் கேமியோக்கள் இருக்கின்றனவே தவிர, கதை என்னும் வஸ்து இல்லவே இல்லை. நாயகனின் அறிமுகக் காட்சி அத்தனை நீளமாகச் சென்றுகொண்டே இருப்பது ஏனோ? எல்லா ஏரியாக்களிலும் ஸ்கோர் செய்தவர்கள் சண்டைக் காட்சிகளுக்கும் கூடுதல் நேரத்தை செலவழித்து இருக்கலாம். க்ளை மாக்ஸில் வரும் பிரபாஸ் Vs அமிதாப் சண்டை மட்டுமே ஆறுதல்.

மகாபாரதத்துக்கு சயின்ஸ் பிக்ஷன் வடிவம் கொடுக்க வேண்டும் என்ற முனைப்பு பாராட்டத்தக்கதுதான். ஆனால் ஏற்கெனவே இருக்கும் மகாபாரதக் காட்சிகள் (வசனங்கள் உட்பட), பலதரப்பட்ட ஹாலிவுட் படங்களின் முக்கியமான ஐடியாக்கள் போன்றவற்றை வெளிப்படையாகவே மிக்ஸியில் போட்டு அரைத்திருக்கிறார் நாக் அஸ்வின்.

திரை அனுபவத்தில் ஜெயிக்கும் இந்த 'கல்கி' ஒரு படைப்பாக சுய சிந்தனை வறட்சியில் சிக்கித் தவிக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சிறுநீரக கற்கள் - சில தப்பபிப்பிராயங்களும் தீர்வுகளும்

சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதுடன் இந்த நோய்கள் காவு கொள்ளும் உயிர்களின் எண்ணிக்கையும் சமானமாக அதிகரித்து வருகின்றது.

அரசாங்கத்தினாலும் சுகாதார அமைச்சினாலும் பல்வேறுபட்ட செயற்றிட்டங்களும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் அமுல்படுத்தப்பட்டும் பெருமளவு நிதி சிறுநீரக நோய்களுக்காக ஒதுக்கப்பட்ட போதும் இந்த நோயின்தாக்கம் அதிகரித்து வருவது கவலைக்கு இடமளிக்கின்றது.

சிறுநீரகக்கற்கள் அல்லது சிறுநீரக கல் அடைப்பு என்பது இன்று எம் மத்தியில் ஒரு பொதுவான சொற்பதம் ஆகியுள்ளது. இன்று தாங்க முடியாத இடுப்பு வலியுடன் வைத்தியசாலை வரும் நோயாளர்களின் 40 வீதமானவர்களுக்கு சிறுநீரக கற்கள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.


சிறுநீரகக் கற்கள் தோன்றுவதற்கு ஒரு முக்கிய காரணமாக நமது குடிநீர் அமைகின்றது 'நீரின்றி அமையாது உலகு. நம் உடலும் உடலின் ஒவ்வொரு சிறு செயற்பாட்டுக்கும் அத்தியாவசியமான பொருள் நீர். அந்த நீரைத் தேவையான அளவு பருக மறந்து அறியாமையில் இருப்பது தான் நம் உழைக்கும் மக்களின் பெரிய குறைப்பாடாக உள்ளது. இன்றைக்கு மட்டுமல்ல, பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரும் சிறுநீரக கல் இருந்திருக்கிறது என்பதற்கு சிறுநீரகக்கல் குறித்த வரலாற்றுச் செய்திகள் சான்றுபகிருகின்றன.

குடிக்கும் நீரை பொறுத்த வரையில் பல வகை வகையான கருத்து வேறுபாடுகள் நம் மக்களிடையே காணப்படுகின்றது. கல்சியம் நீரை பருகினால் சிறுநீர் கற்கள் வரும் அபாயம் உண்டா ? Filter நீர் அருந்துவது அவசியமா? எந்த அளவு நீர் பருக வேண்டும்? இப்படியான பல கேள்விகளுடன் நான் நோயாளர்களை தினமும் சந்தித்து வருகின்றேன்.

கல்சியம் நீரை பருகுவதால் சிறுநீரகக்கற்கள் தோன்றும் என்பது ஒரு மூட நம்பிக்கையாகும். எமது உடம்பில் கல்சியம் அளவை கட்டுப்படுத்தும் அல்லது ஒழுங்குபடுத்தும் சுரப்பிகள் உள்ளன. இவை ஒருவருக்கு தேவையான கல்சியத்தின் அளவை கட்டுப்படுத்துவதுடன் மிகையான கல்சியத்தை உடம்பில் அகத்துறிஞ்சாது வெளியேற்றி விடுகின்றன. எனவே அதிகளவில் கல்சியம் நீரை பருகுவதோ கல்சியம் வில்லைகளை பாவிப்பதோ சிறுநீரக கற்களை உருவாக்கும் என்ற நம்பிக்கையில் இருந்து நீங்கள் வெளிவருவது முக்கியமாகும்.

இன்று filter நீரின் அதிகரித்த பயன்பாடு பல வியாபாரிகளை அதன் பக்கம் இழுத்து உள்ளது.filter நீர் குடிப்பது என்பது ஒரு தவறான விடயமில்லை. ஆனால் filter நீர் குடிப்பதனால் சிறுநீரக கற்கள் தோன்றுவதை தடுக்கலாம் என்ற கற்பனையில் filter நீரை பாவிப்பதில் தான் தவறு இருக்கின்றது.

இன்று அநுராதபுரம், பொலநறுவை போன்ற மாவட்டங்களில் காரணம் தெரியாத சிறுநீரக நோய்களின் தாக்கம் (CKD U) அதிகமாக உள்ளது என்பது அனைவரும் அறிந்த ஒன்று. அத்துடன் இந்த மாவட்டங்களில் குடிநீரிலும் மாசுக்கள் கண்டுபிடிக்கபட்டுள்ளதால் filter நீரின் பயன்பாடு ஏற்றுக்கொள்ளக்கூடியது என்றாலும் காரணம் தெரியாத சிறுநீரக நோய்களுக்கும் குடிநீருக்கும் ஆன தொடர்புகள் இன்னும் விஞ்ஞானரீதியில் நிரூபிக்கப்படவில்லை



என்பது குறிப்பிடத்தக்கது.

நாம் குடிக்கும் நீரின் அளவு சிறுநீரக கற்களுடன் தொடர்புபட்டுள்ளது. எமது பரபரப்பு நிறைந்த வாழ்க்கையில் நாம் மறந்து விடும் ஒரு விடயம் தான் நீர் அருந்துவது என்பது. இலங்கை ஒரு வெப்பவலய நாடு என்பதாலும் பெரும்பாலான மக்கள் கடினமான வேலை செய்து உழைப்பவர்களாகவும் இருப்பதால் கணிசமான அளவு நீரை வியர்வையாக இழந்து விடுகின்றனர்.இதை சமப்படுத்த அதிகளவு நீர் அருந்துதல் இன்றி அமையாதது.

சாதாரண மாசில்லாத ஆற்று, கிணற்று நீரை பருகிய காலங்கள் இன்னும் எம் நினைவில் நிற்க அக்காலத்தில் அருமையாக கேள்விப்பட்ட சிறுநீரகக் கல்லடைப்பு பிரச்சினை இப்போது பிளாஸ்டிக் குடுவையில், ரிவர்ஸ் ஆஸ்மாசிஸ் (RO Filter) செய்து, பலதர நிர்ணயக் கட்டுப்பாட்டுடன் தருவிக்கப்படுவதாகச் சொல்லப்படும் தண்ணீரை அருந்தும் காலத்தில் அதிகரித்து வருகிறது. பதப்படுத்தப்பட்ட அனைத்து உணவுகளிலும், (Fast food) துரித உணவிலும், உள்ள அதிக உப்புக்களும் சிறுநீரகக்கல் உருவாக காரணமா அமையலாம்.

சிறுநீரக குழாய்களில் ஏற்படும் அடைப்புகள் அல்லது சிறுநீர் வெளியேறுவதில் உள்ள சிக்கல்கள் சிறுநீர், சிறுநீர் பைகளில் தேங்கிநிற்க காரணமாகி சிறுநீர் கற்களை உருவாக்கி விடுகின்றன.

சிறுநீரக கற்கள் உங்கள் கிட்னியிலோ சிறுநீர் குழாயிலோ அல்லது சிறுநீர் பையிலோ உருவாகலாம் .

சிறுநீரக கற்களின் அறிகுறிகளாக தாங்க முடியாத இடுப்பு வலி, சிறுநீரில் இரத்தம் வெளியேறுதல், சிறுநீர் எரிவு, சிறுநீர் அடைப்பு போன்றவற்றை குறிப்பிடலாம்.எனினும் சிறுநீரகத்தில் உருவாகும் சில கற்கள் அமைதியாக இருந்து சிறுநீரக தொழிற்பாட்டை முடக்கி விடுகின்றன.

சிறுநீரக கற்களை இன்றைய நவீன மருத்துவத்துறையின் தொழில்நுட்பம் இலகுவாக கண்டறிவிக்கின்றது. X-Ray, அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மூலம் 90% ஆன சிறு நீரககற்கள் கண்டு அறியப்படுகின்றது.

சிறுநீரக கற்கள் இலகுவாக எமது கிட்னியில் இருந்து அகற்றப்படக் கூடியவை .இன்று மருத்துவத்துறையில் இதற்கான தீர்வுகள் மிகவும் வளர்ச்சி அடைந்துள்ளது. வயிறு வெட்டி சிறுநீரக கற்கள் அகற்றிய காலம் மலை ஏறி சிறிய துளையினூடாக பெரியளவு கற்களையும் உடைத்து அகற்றும் மிக நுட்பமான சிகிச்சை முறைகள் பிரபல்யம் அடைந்து வருகின்றன.

'கல்லடைப்பு' என்று மருத்துவர் சொன்னதும் நீங்கள் பதற வேண்டியது இல்லை. அண்ணளவாக 8 மி.மீ வரையுள்ள கல்லைப்பார்த்து மிரளத் தேவை இல்லை. வலியைச் சமாளிக்கும் மருந்துகளை வைத்திய ஆலோசனையுடன் எடுப்பதும் கரைக்கும் மருந்தாக அதிகளவு நீர் பருகுவதும் போதுமானது.

அதே நேரத்தில், "அட இருந்துட்டுப் போகட்டும்" என்ற அலட்சியமும் கூடாது. கல்லடைப்பு சிறுநீர் குழாய்களில் வரும் பொழுது அது சிறுநீரகச் செயலிழப்பு வரை கொண்டு சேர்த்துவிடும்.

மருத்துவ வசதிகள் வேகமாக முன்னேறி வருகின்ற போதும் பல வகையான பாட்டி வைத்தியம் பற்றியும் கேள்விப்பட்டு கொண்டுதான் இருக்கின்றோம். வாழைத் தண்டுசாறு பருகுதல், சதை கரைச்சான் சாப்பிடுதல், எலுமிச்சை சாறு குடித்தல் என்னும் அவர்களது அறிவுரைகளுக்கு விஞ்ஞானம் இடம் கொடுக்காதபோதும் நடைமுறையில் மறுக்க முடியாது உள்ளது.

**சிறுநீரக கற்களுக்கான புதிய சிகிச்சை முறைகள்**

1. லிதோற்றபிஸி : சிறுநீரக கற்களின் அளவை பொறுத்து அது ESWL மூலமாகவா அல்லது லேசர் மூலமாகவா என்று வைத்தியர்கள் தீர்மானிக்கின்றார்கள். ESWL , அல்ட்ரா சவுண்ட் waves சிறுநீரக கற்களை நேரடியாக தாக்கி பொடி ஆக்கி சிறுநீருடன் வெளியேற்றிவிடுகின்றது. சிறுநீரகத்தில் உள்ள 2cm வரையான கற்கள் இந்த முறைக்கு பொருந்தும். மயக்க மருந்துகள் இன்றி குறைந்த நேரதில் சிறுநீரகக் கற்களை அகற்றி விடலாம்

2. லேசர் சிகிச்சை: லேசர் சிகிச்சையின் அறிமுகம் சிறுநீரக கற்களின் வரலாற்றில் ஒரு மயில் கல் என்றே கருத வேண்டும். சிறுநீர் துவாரத்தினூடாக மெல்லிய கமராக்களை செலுத்தி சிறுநீரக கற்களை உடைத்து முற்றாக அகற்றும் தொழில் நுட்பம் பிரபல்யம் அடைந்து வருகின்றது. இதன் மூலம் அண்ணளவாக 2cm வரைக்குமான கற்கள் சிறுநீர் வழியில் எங்கு இருந்தாலும் அகற்ற முடியும்

3. PCNL பிசினல் சத்திரசிகிச்சை நுட்பம்: பழைய வயிறு வெட்டி சிறுநீரக கற்கள் அகற்றும் முறைக்கு முற்று புள்ளி வைத்து சிறுநீரக சத்திர சிகிச்சையில் ஒரு புதுயுகம் படைத்துள்ளது. பொது மயக்க மருந்தில், இடுப்பில் 1CM அளவான துவாரத்தின் (key Hole) ஊடாக சிறுநீரகத்தில் உள்ள எந்த அளவான கற்களையும் உடைத்து அகற்றி கொள்ளலாம். இம் முறையில் நோயாளர்கள் இரண்டு நாட்களில் வீட்டுக்கு செல்வதுடன் ஒரு வாரத்துக்குள் தமது சாதாரண வாழ்க்கைக்கு திரும்பி விடலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படியான பல புதிய தொழில் நுட்பங்களின் அறிமுகமும் துரித வளர்ச்சியும் சிறுநீரக கற்களுக்கான நிரந்தர தீர்வாக அமைகின்றன.


எனவே சிறுநீரக கற்கள் பற்றிய அறிவும் விழிப்புணர்ச்சியும் சுத்தமான நீர் பருகுதலும் சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கையை குறைப்பதில் பங்கு வகிக்கின்றது என்ற தெளிவே இந்த ஆக்கத்தின் வெற்றி ஆகும்.

**Dr.தே.அரவிந்தன்.**
**சிறுநீரக-சனனி சத்திர சிகிச்சை நிபுணர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பரமபிதா காட்டிய பாதை

## நம்பிக்கையின்மையை அகற்றுவதற்கு முயற்சிகள் எடுப்போம்



பைபிள் மாற்கு புத்தகத்திலிருந்து எடுக்கப்படும் நற்செய்தி 6:1-6 இன்று. இயேசு ஒரு புதிய மனிதராக தன்னுடைய சொந்த ஊருக்கு வருகிறார் என்பதைக் காட்டுகின்றது. அங்கு போதகர் என்ற அடையாளத்தோடு, அவருடைய சீடர்களோடு தொழுகைக் கூடத்தில் போதிக்கிறார். பொதுவாக, இயேசு வாழ்ந்த காலத்தில் போதகர்கள் தங்களுடைய சீடர்களோடு ஊர் ஊராகச் சென்று, போதிப்பது வழக்கமாக இருந்தது. போதகர்களை மக்கள் ஏற்றுக் கொண்டிருந்தனர். போதகர்களுக்கு மக்கள் நடுவில் மதிப்பும், மரியாதையும் இருந்தது. நோய்கள் குணமாகப் போதகர்களை செபிக்க சொல்வதும், அவர்களின் போதனைகளைக் கேட்பதற்குச் செல்வதும் மக்களுக்குப் பழக்கமானதாக இருந்தது. ஆனால் இயேசு தனது சொந்த ஊருக்கு வந்தபோது, இயேசுவை மக்கள் ஏற்றுக் கொள்ளாமையால் அங்கு இயேசு வல்ல செயல் எதையும் செய்ய முடியவில்லை.

அடிப்படையில் இயேசுவிடத்தில் அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. இயேசு ஒரு சாதாரண தச்சருடைய மகன். இவரைப் பற்றித் தெரியாதா? இவரால் எப்படி வல்ல செயல்கள் செய்ய முடியும்? நம்மோடு வாழ்ந்தவர், ஏழைப் பிண்ணனியிலிருந்து வந்தவர். இவரிடத்திலே எப்படி கடவுளின் அருள் அதிகமாக இருக்க முடியும்? இவரிடத்திலிருந்து நாம் என்ன பெரிதாகப் பெற்றுக்கொள்ள முடியும்? என்கிற அந்த எண்ணம் தான், புதுமைகள் செய்வதற்கு இயேசுவால் முடியாமல் போனதற்கான காரணம்.

முடியும் என்ற நம்பிக்கை இல்லையென்றால், நிச்சயமாகச் செய்யக்கூடிய காரியம் முடியாமல் தான் போகும். அடிப்படையில் நம்பிக்கை இருந்தால் எதையும் செய்ய முடியும். முடியும் என்ற நம்பிக்கை கடவுள் மேல் நாம் வைத்திருக்கிற நம்பிக்கையை அடிப்படையாக வைத்து அமைகிறது.

எந்த ஒரு மனிதர் கடவுள் பத்தியோடு இருக்கிறாரோ, கடவுள் நம்பிக்கையோடு வாழ்கிறாரோ, அவர், தனது வாழ்வில் எல்லாம் முடியும் என்று நம்புகிறார். கடவுளின் வல்ல செயல்களில் முழு நம்பிக்கை வைத்து, தன்னையே அர்ப்பணிக்கிறார். நமது வாழ்வில் நம்மால் எதையும் செய்ய முடியும் என்று நாம் முழுமையாக நம்ப வேண்டும். அதற்கு அடிப்படையில் கடவுள் நம்பிக்கை இருக்க வேண்டும். அப்போது நம்மால் முடியாத காரியங்கள் ஒன்றும் இருக்க முடியாது. "சொந்த ஊரிலும் சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப் பெறுவர்." என எமக்கு இயேசு தெளிவாக கூறுகின்றார். இது எம்மால் விளங்கிக் கொள்ளக் கூடிய ஒரு விடயம்தான். ஏனெனில் மனிதமனம் புகழை விரும்புகின்றபோது அதைக் கடந்து தெய்வீகப் பரிமாணத்துக்குத் திறந்திருப்பது கடினமானது. இயேசு உடல் நலமற்றோர் சிலர் மேல் கைகளை வைத்துக் குணமாக்கியதைத் தவிர, நாசரேத்தில் எந்த அற்புதத்தையும் செய்ய முடியவில்லை. ஏனெனில் அந்த மக்கள் மனங்கள் ஆன்மீக பரிமாணத்துக்கு மூடப்பட்டிருந்தன.

இயேசு நிகழ்த்தும் புதுமைகளைப் பெற வேண்டுமெனில் அவர் மீது நம்பிக்கை கொண்டு அவருக்குத் திறந்த மனம் உள்ளவர்களாய் வாழ்வது அவசியம். இதனை இயேசு நாசரேத்தூரில் புறக்கணிக்கப்பட்ட நிகழ்வு குறித்துக் காட்டுகின்றது. இயேசுவின் அற்புதங்கள் வல்லமையின் வெளிப்பாடு அல்ல, மாறாக இறையன்பின் அடையாளங்கள், மனிதரிடத்தில் விசுவாசத்தைக் காணும்போது அவை நிகழும். அவரது அன்பில் நம்பிக்கை வைப்போம், அவரது அருள் நம்மைக் கைவிடாது. நமது வாழ்வில் நம்பிக்கையின்மையை அகற்றுவதற்கு முயற்சிகள் எடுப்போம். இறைவனிடமிருந்து, அருளையும் வல்லமையும் இழப்பதற்கு காரணமாக இருக்கும் நம்பிக்கையின்மையை வேரோடு அகற்றுவோம்

**ம.பிரான்சிஸ்க் -**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்**

# இன்று ஒரு தகவல் 175



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## உண்மையும் நேர்மையும்

பிரபஞ்சனன் என்று ஒரு ராஜா. சரஸ்வதி நதிக்கரையிலே இருந்த ஒரு நாட்டுக்கு அவன் அரசன். ஒரு நாள் அவன் காட்டுக்கு வேட்டையாடப் போனான். காட்டிலே ஒரு பெண் மான் தன்னுடைய குட்டிக்கு பால் கொடுத்துக் கொண்டிருந்தது. இவன் அதைப் பார்த்து விட்டான். அம்பை எடுத்து அங்கே விட்டான். அது போய் அந்த மானைக் குத்தியது. உடனே அந்த மான் ஒரு சாபம் கொடுத்தது. அம்பு சீயி அரசன் புலியாக மாறக்கடவது என்றார். அந்த சாபமும் உடனே பலித்து விட்டது. அரசன் புலியாக மாறிவிட்டான். உடம்பெல்லாம் கோடு கோடாக மாறி விட்டது. பின்னாடி வால் எல்லாம் உண்டாகி விட்டது. உடனே அந்த மானைப் பார்த்து நான் செய்த குற்றத்தை மறந்து மன்னிக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டான்.

நீ நூறு வருடம் புலியாக இருந்து சாபத்தை அனுபவிக்க வேண்டியது. அதற்குப் பின் நந்தா என்கின்ற பசு மூலம் உனக்கு சாப விமோசனம் ஏற்படும் என்று சொல்லி அந்த மான் உயிரை விட்டது. புலியாக மாறிய ராஜா வாலை ஆட்டிக்கொண்டு காட்டுக்குள்ளே ஓடிப்போனார். நூறு வருடத்துக்கு பின் ஒரு நாள் அந்த காட்டிற்குள் நிறைய பசு மாடு எல்லாம் மேய வந்தது. காலையிலே வந்த மாடுகள் எல்லாம் சாய்ந்தரம் வரைக்கும் மேய்ந்து விட்டு ஊருக்கு திரும்பி போய்விட்டது. ஒரே ஒரு பசுமாடு மட்டும் பின்னாலே தங்கிவிட்டது.இது தங்கிப் போனதை மற்றைய மாடுகளெல்லாம் கவனிக்கவில்லை. அந்த நேரம் பார்த்து மழை வேற பெய்தது. இந்த மாடு மட்டும் தனியாக ஒரு மரத்தடியிலே நின்று கொண்டு மழை விட்டதற்கு பின்பு ஊரைப் பார்க்க நடக்க ஆரம்பித்தது.

அந்த நேரம் பார்த்து ஒரு புலி தன்னுடைய குட்டிகளுக்கு இரை தேடிக்கொண்டு அந்தப் பக்கமாக வந்தது. இந்த பசு மாட்டைப் பார்த்து விட்டது. சும்மா இருக்காமல் பாய்வதற்கு தயாராகியது. அந்த நேரத்திலே அந்த பசு தன்னுடைய உயிர் போவதைப்பற்றி கவலைப் படவில்லை. ஆனால். கோகுலத்திலே தன்னுடைய கன்றுக்குட்டி தனக்காக காத்திருக்குமே என்று நினைக்கின்ற போது தான் அதனுடைய மனது மிகவும் கஷ்டப்பட்டது. உடனே அந்த புலியைப் பார்த்து ஜயா கோகுலத்திலே என்னுடைய கன்றுக்குட்டி மிகவும் பசியோடு எனக்காக காத்துக்கொண்டிருக்கும். அதற்கு பால் கொடுப்பதற்குத்தான் இவ்வளவு வேகமாக போய்கொண்டிருக்கிறேன். நான் போய் பால் கொடுத்து விட்டு என் கன்றுக் குட்டியை மற்றைய பசுக்களிடம் ஒப்படைத்து விட்டு வருவதற்கும் அதைப் பார்த்து கடைசியாக புத்திமதி சொல்லிவிட்டு வருவதற்கும் அனுமதி கொடுத்தால் நான் போய் வந்துவிடுவேன் என்றது.

நீ சொல்வதை நான் எப்படி நம்ப முடியும்? உன்னை இப்போது போகவிட்டால் நீ திரும்பி வருவாய் என்பதற்கு என்ன நிச்சயம்? இன்றைக்கு நீ எனக்கு இரையாக வேண்டும் என்பது விதி என்று சொல்லிவிட்டு அருகில் போனது புலி. நான் வார்த்தை தவறமாட்டேன். சொன்ன சொல் தவறினால் என்னென்ன பாவங்களை அனுபவிக்க வேண்டும் என்பது எனக்கு நன்றாகத் தெரியும். என்னை நம்புங்கள் என்றது பசு. புலியினுடைய மனது இளகியது. சரி உன்னை நான் நம்புகின்றேன். நீ போய்வா ஆனால் ஒரு விடயம் உயிர் தப்பிப்பதற்காக பொய் சொல்லலாம் அது தப்பு இல்லை என்று உனக்கு சில பேர் உபதேசம் செய்தாலும் செய்வார்கள். அதைக் கேட்டு நீ ஏமாந்து விடக்கூடாது வாக்கு கொடுத்த பிரகாரம் இங்கே வந்து சேர வேண்டும் என்றது புலி.

சரி என்று சொல்லிவிட்டு அந்த பசு வேகமாக ஊருக்குள்ளே ஓடியது. கன்றுக்குட்டியைப் பார்த்து பால் கொடுத்தது. அதன் பின்பு விவரத்தைச் சொல்லியது. அதைக்கேட்ட கன்றுக்குட்டி அப்படி என்றால் நானும் உன்னோடு சேர்ந்து அந்தப் புலிக்கு இரையாகி விடுகிறேன் என்றது. அப்படியெல்லம் செய்யக்கூடாது என்று சொல்லி அந்தப் பசு கன்றுக்குட்டியை மற்றைய பசுக்களிடம் ஒப்படைத்து விட்டு காட்டுக்குப்புறப்பட்டது. பொய் சொல்லி உயிரைக் காப்பாற்றினால் அது உண்மைக்கு சமம். உயிருக்கு அழிவை உண்டு செய்கின்ற உண்மை பொய்க்கு சமம். அதனாலே நீ புலிக்கு கொடுத்த வாக்குறுதியை பற்றிக் கவலைப்படாதே என்று மற்றைய பசுக்கெல்லாம் சொல்லிப் பார்த்தது. இந்த பசு அதற்கு சம்மதிக்கவில்லை.

மற்றவர்களை காப்பாற்றுவதற்காக வேண்டும் என்றால் பொய் சொல்லலாம். என் உயிரைக் காப்பற்றுவதற்காக நான் பொய் சொல்ல மாட்டேன் என்று சொல்லி விட்டது. அந்த பசு உடனே வேகமாக அந்தப் புலி அருகில் போய் நின்றது. அங்கே போய்ப் பார்த்தால் இதற்கு முன்னாலே இதனுடைய கன்றுக்குட்டி போய் நின்றது. என் தாயோடு சேர்த்து என்னையும் உனக்கு இரையாக்கிக்கொள் என்று கேட்டுக் கொண்டிருந்தது. இப்போது தான் அந்தப் புலிக்கு தன்னுடைய குட்டிகளைப் பற்றி நினைவு வந்தது. நான் இறந்து விட்டால் என்னுடைய குட்டிகள் என்ன பாடுபடும்? அதே நிலைமைதானே இந்தக் கன்றுக்குட்டிக்கும் ஏற்படும் என்று நினைத்துப பார்த்தது. அதனுடைய மனதை மாற்றிக் கொண்டது. வாய்மை ஜெயித்து விட்டது. சத்தியம் காப்பற்றப்பட்டது. அந்த புலி அந்த பசுவிடம் நீ எனக்கு உபதேசம் செய்ய வேண்டும் என கேட்டுக் கொண்டது.

எல்லா உயிர்களுக்கும் எவன் அபயம் அளிக்கின்றானோ அவன் பிரம்மத்தை அடைகின்றான் என்று சொல்லி முடித்தது பசு. அப்போது தான் அந்த பசு நந்தா என்பது புலிக்கு தெரிந்தது. உடனே அதைத் தொட்டுக் வணங்கினான். உடனே புலி உருவம் மாறி பழைய ராஜா உருவம் வந்துவிட்டது. பிரபஞ்சனன் மறுபடியும் நாட்டுக்குத் திரும்பி ஆட்சி செய்ய ஆரம்பித்து விட்டான். இந்த கதையிலே இருந்து தெரிந்து கொள்ள வேண்டியது. என்னென்ன உண்மையிலேயும் நேர்மை கலந்திருக்கும் என்பது தான் இந்த காலத்திலே சில பேர் இதை தப்பாக பரிந்து கொள்வதுண்டு. உண்மையும் நேர்மையும் உயர்வு தரும் என்பதை அனுபவ பூர்வமாக நான் புரிந்து கொண்டேன் சார் என்றான் ஒரு பையன் எப்படி என்று கேட்டேன். நான் பரிட்சையிலே காப்பியடித்தேன் என்கிற உண்மையை மிகவும் நேர்மையாக என் ஆசிரியரிடமே ஒத்துக்கொண்டேன். உடனே அவர் என்னை மேசை மேலே ஏறச்சொல்லிவிட்டார். நான் உடனே ஏறி நின்றேன் . நான் மற்ற பையன்களை விட உயர்ந்து விட்டேன். உண்மை தான் என்னை உயர வைத்தது என்றான் மிகவும் அடக்கமாக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மறைந்த இரா. சம்பந்தனுக்கான நினைவு அஞ்சலி நேற்று வட்டக்கச்சி பொதுச்சந்தை முன்பாக நடைபெற்றது. குறித்த நினைவஞ்சலி நிகழ்வு பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், வர்த்தகர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (படம்-தேவானந்தன்)



அக்கராஜன் மன்னனின் சிலை நிறுவிய ஆறு ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று அக்கராயனில் நடைபெற்றது. கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர். வேழமாலிகிதன் தலைமையில் நடைபெற்ற நினைவு தின நிகழ்வில் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (படம்-தேவானந்தன்)




யாழ்.போக்குவரத்துத்துறை பொலிஸாரின் வேண்டுகோளுக்கு அமைவாக NO PARKING பலகைகள் 50 இன்று யாழ்ப்பாணம் தலைமை பொலிஸ் நிலையத்தில் வைத்து தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் போக்குவரத்துக்கு பொறுப்பான அதிகாரியிடம் pickMe நிறுவனத்தினர் கையளித்துள்ளனர்.



அச்சுவேலி காட்டுமலை கந்தசுவாமி மீது ரஜரட்ட பல்கலைக்கழக மாணவி பா. அர்ச்சனாவால் எழுதிப் பாடப்பட்ட அர்ச்சனைப் பூக்கள் என்ற இசைப்பேழை வெளியீட்டு விழா அண்மையில் காட்டுமலை கந்தசுவாமி ஆலய முன்றிலில் சப்பரத் திருவிழா நிறைவில் நடைபெற்றது.மன்னார் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞான. ஆதவன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முதல்வர் ச.லலீசன் கலந்து கொண்டார். (படம்- சிவசாந்தன்)



முல்லைத்தீவு பாலிநகர் மகா வித்தியாலயத்தில் சந்தை செய்முறை நிகழ்வுகளில் நேற்று முன்தினம் மாணவர்கள் பங்கு கொண்டனர். தரம் 9 மாணவர்களால் தொழில் நுட்பபாடத்தினுடைய ஓர் அங்கமாக இது இடம்பெற்றது. (படம்-கிருஷ்ணகுமார்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல செயல் எப்போதும் உலகில் தனக்கு ஓர் இடம் உண்டாக்கிக்கொள்ளும். -- எமர்சன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வட மாகாண வைத்தியசாலைகளை மேற்பார்வைக்கு உட்படுத்துங்கள்

வட மாகாணத்தின் நிர்வாகம் பலயீனமாக இருக்கிறது. எனவே வடக்கு மாகாண ஆளுநர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என இவ்விடத்தில் பல தடவைகள் பிரஸ்தாபித்திருந்தோம்.

ஆயினும் நாம் கூறிய விடயம் ஆளுநருக்கு எதிரானதாகப் பொருள் கொள்ளப்பட்டது.

அதன் காரணமாக நடந்த சம்பவங்கள் என்ன என்பது அனைவரும் அறிந்ததே.

பரவாயில்லை. உள்ளதை உள்ளபடி கூறுகின்ற பத்திரிகை தர்மத்தை நாம் பின்பற்றியாக வேண்டும்.

அந்த வகையில் இப்போதும் வடக்கு மாகாண ஆளுநரின் நடவடிக்கைக்காக இவ்விடயம் எழுதப்படுகிறது.

ஆம், சாவகச்சேரி வைத்தியசாலை தொடர்பில் அதன் பொறுப்பதிகாரி கூறிய விடயம் இப்போது பேசுபடுபொருளாகியுள்ளது.

பிரஸ்தாப வைத்திய அதிகாரி முன்வைத்த விடயங்கள் தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் எழலாம்.

ஒரு வைத்திய அதிகாரி இவ்விதம் செய்திப் பரப்புரை செய்யலாமா? என்றெல்லாம் கேள்வி கேட்கலாம். ஆனால் அவை அனைத்தும் தேவையற்றவை.

பிரஸ்தாப வைத்திய அதிகாரி கூறியதில் இருக்கக்கூடிய உண்மைத்தன்மை என்னவென்று அறிவதுதான் புத்திசாலித்தனம். இதனையே மெய்ப்பொருள் காண்பது அறிவு என வள்ளுவப் பெருமான் குறித்துரைத்தார்.

ஆக, சாவகச்சேரி வைத்தியசாலைக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட வைத்திய அதிகாரி தனது முகநூலில் பதிவு செய்த விடயங்கள் தொடர்பில் உயர் அதிகாரிகள் அடங்கிய விசேட குழுவொன்று நேரில் சென்று விசாரணை நடத்தி உண்மை நிலையை வெளிப்படுத்த வேண்டும்.

பிரஸ்தாப வைத்திய அதிகாரி முன்வைத்த கருத்துக்கள் ஏற்புடையவை எனக் கருதுமிடத்தில் அதை உள்ளபடியே வெளிப்படுத்துவது, நிர்வாகம் சீர்படுவதற்குக் கட்டாயமானது.

அதேநேரம் வைத்திய அதிகாரி தனது முகநூலில் பதிவிட்ட விடயங்களில் திரிவுபடுத்தல்கள் இருந்தால், அதனையும் பகிரங்கப்படுத்துவது அவசியமாகும்.

எனவே சாவகச்சேரி வைத்தியசாலை விவகாரம் தொடர்பில் ஒரு நேர்த்தியான விசாரணை இடம்பெற வேண்டும்.

அதேநேரம் வட மாகாணத்திலுள்ள அத்தனை அரச வைத்தியசாலைகளுக்கும் விசேட மேற்பார்வை குழுவை அனுப்பி, குறித்த வைத்தியசாலைகளின் சமகால இயங்குநிலை பற்றிய விரிவான தகவல்களைப் பெற்றுக் கொள்வது கட்டாயமானது.

இதுவிடயத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தின் உதவியை நாடுளவது பொருத்துடையது.

எது எவ்வாறாயினும் வடமாகாணத்திலுள்ள அத்தனை வைத்தியசாலைகளினதும் செயற்பாடுகள் குறித்து உடனடியாகக் கள ஆய்வு செய்யப்பட வேண்டும். இல்லையேல் எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

# எமது ஆட்சியில் நாடு மறுசீரமைக்கப்பட்டு இளைஞர்களிடம் ஒப்படைக்கப்படும்

## அநுர குமார திஸாநாயக்க உறுதி

தேசிய மக்கள் சக்தி அதிகாரத்தை கைப்பற்றிய உடன் இலங்கை பாரிய மாற்றங்களுக்கு உள்ளாகும். நாட்டின் அனைத்துத் துறைகளும் விஞ்ஞான பூர்வமாக கட்டமைக்கப்படும். அதேபோன்று தொடர்ந்து வயதாகும் வரை அதிகாரத்தில் இருப்பதல்ல எமது நோக்கம். உரிய நேரத்தில் இளைஞர்களிடம் அதிகாரத்தை கையளித்துவிடுவோம என அநுர தெரிவித்தார்.தொடர்ந்து அவர் கருத்து வெளியிடுகையில்,

ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றவுடன் பாராளுமன்றம் கலைக்கப்படும். அதன் பின் பாராளுமன்றத்தில் உள்ள ஊழல் மற்றும் நாசகார குழு விரட்டியடிக்கப்படும்.

அடுத்ததாக மாகாண சபை மற்றும் உள்ளுராட்சி சபைத் தேர்தல்கள் மூலம் நாட்டின் அதிகாரம் புதிய குழுவிற்கு மாற்றப்படும்.

ஏன் தேசிய மக்கள் சக்தி நாட்டுக்குத் தேவையெனில் எங்களுக்கு தனிப்பட்ட நலன்கள் இல்லை. நிலத்தை அபகரிக்கவோ, ஹோட்டல்களை வாங்கவோ, சாராய ஆலைகளை திறக்கவோ, மணல் கொள்ளையடிக்கவோ, எரிபொருள் நிலையங்களை வாங்கவோ தேவை இல்லை.

மக்களின் வளங்கள் மக்களுக்கானது. அதன் ஊடாக நாட்டை அபிவிருத்தி செய்வதே எமது நோக்கம். ஹோட்டல் கட்ட விரும்பும் ஹோட்டல் துறையினருக்கே சந்தர்ப்பம் அளிக்கப்படும். விவசாயம் செய்ய விரும்பும் விவசாயிகளுக்கு வாய்ப்பளிக்கப்படும்.

எரிபொருள் நிலையத்தை திறக்க விரும்பும் தொழிலதிபர்களுக்கு அந்த வாய்ப்புகள் வழங்கப்படும். இவ்வாறு துறைசார் சார்ந்தவர்களுக்கே அந்த வாய்ப்புகள் வழங்கப்படும்.

நாட்டை மீளக் கட்டியெழுப்ப நல்ல திட்டங்களை வகுத்து வருகிறோம். நாங்கள் வயதாகும்வரை அதிகாரத்தில் இருக்க மாட்டோம்.

சரியான நேரத்தில் எம் கையில் உள்ள அதிகாரத்தை புதிய தலைமுறை இளைஞர்களிடம் ஒப்படைத்து விடுவோம். ஆனால் தற்போதைய ஆட்சியாளர்கள் அதிகாரத்தை விட்டு வெளியேற தயாராக இல்லை என்றார். (ம-7,10)

# சர்வதேச ஆய்வுக் கப்பல்களுக்கான தடை அடுத்தாண்டு நீக்கப்படும்

## அலி சப்ரி தெரிவிப்பு

இலங்கை கடற்பரப்பில் அடுத்த ஆண்டில் இருந்து சர்வதேச ஆய்வுக் கப்பல்களுக்கு தடைவிதிக்கப்பட மாட்டாது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஜப்பான் ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

சீன ஆய்வுக் கப்பல் நாட்டின் கடற்பரப்பிற்குள் நுழைய அனுமதி வழங்கப்படாமை தொடர்பில் கருத்து வெளியிட்ட போதே இதனைக் தெரிவித்த அவர்.

சோனார் தொழிநுட்பத்துடனான கப்பலொன்றை இலங்கைக்கு வழங்கியமை தொடர்பில் வெளியுறவு அமைச்சர் ஜப்பான் அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்துள்ளார். (ம-7,10)

# நாட்டு மக்களின் நலன்கருதி ரணிலுக்கு தொடர்ந்தும் ஆதரவு

## பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டு மக்களை பாதுகாக்கும் வரையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு வழங்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் ரோஹித அபேகுணவர்தனவின் 27 ஆண்டு கால அரசியல் பயணத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று அவர் இந்த விடயத்தை கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தவிசாளர் கட்சியை விட்டு வெளியேறிய போதும், சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப நாட்டை மீட்கக் கூடிய ஆற்றல் ரணிலுக்கு இருந்ததனாலேயே நாம் அவருக்கு ஆதரவளித்தோம். நாட்டின் நலன் கருதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கப்படும் என பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்

இந்த நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ, கோட்டாபய ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினரகளான நாமல் ராஜபக்ச மற்றும் தம்மிக்க பெரேரா ஆகியோரும் பங்கேற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

# கையூட்டல் பெறமுயன்ற பொலிஸாருக்கு மறியல்

கையூட்டல் பெற முயன்ற குற்றச்சாட்டில் கைதான கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் இருவர் எதிர்வரும் 9 ஆம் திக்தி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு மேலதிக நீதவான் பவித்ரா சஞ்சீவனி பத்திராஜ முன்னிலையில் அவர்கள் பிரசன்னப்படுத்தப்பட்டபோது, இதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நிலுவையில் உள்ள வழக்கு ஒன்றின் முறைப்பாட்டாளரிடம் 54,000 ரூபாவை கையூட்டலாகப் பெறமுயன்ற குற்றச்சாட்டில் கையூட்டல் விசாரணை ஆணைக் குழுவினால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் ஒருவரும், கான்ஸ்டபிள் ஒருவருமே இவ்வாறு கைதாகியுள்ளனர். (ம-7,10)

# குற்றச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் கைது

(குடத்தனை)

வடமராட்சி கிழக்கு குடத்தனை மாளிகைத் திடல் கிராமத்தில் பல்வேறு வாள் வாள்வெட்டு சம்பவங்கள், மக்களை அச்சுறுத்துதல் உட்பட பல்வேறு சம்பவங்களுடன் தொடர்புடைய இளைஞர் ஒருவர் அவரது வீட்டில் வைத்து மருதங்கேணி பொலிஸாரால் வாளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞன் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர் என்றும், பலருக்கு வாளால் வெட்டியமை, அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர் என்றும் பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த சந்தேக நபர் வெவ்வேறு இடங்களில் தலைமறைவாக வசித்து வந்த நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை பிற்பகல் தனது தாயார் வீட்டிற்க்கு வந்திறங்கிய சில நிமிடங்களில் மருதங்கேணி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரிடம் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வரும் மருதங்கேணி பொலிஸார் சந்தேக நபரை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் அகழ்வு 4 டிப்பர்களும் சாரதிகளும் கைது



(தருமபுரம்)

மணல் அகழ்வுக்கு அனும திக்கப்படாத பகுதியில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் நான்கு டிப்பர்களும் அதன் சாரதிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்

தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்க மைவாக தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறு பகு தியில் அனுமதி பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றி பயணித்த நான்கு டிப்பர் களும் அதன் சாரதிகளும் வீதிச் சோதனையின் போது கைது செய் யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக் கப்பட் டுள் ளதுடன் தடையப் பொருட்களை எதிர் வரும் பத்தாம் திகதி கிளி நொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி டி.எம் சது ரங்க தெரிவித்துள்ளார். (நி-316)

# குப்பை கொட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து அல்லிப்பளை மக்கள் எதிர்ப்பு போராட்டம்



(முறிகண்டி)

குப்பை கொட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அல் லிப் பளை மக்கள் எதிர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்

கிளிநொச்சி பச்சிலைப் பள்ளி பிரதே செயலாளர் பரிவிற்குட்பட்ட அல்லிப்பளை பிரதேசத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை யினால்குப்பைக் கழிவுகள் கொட்டப்பட்டுள்ளது. இந்த நிலையில் குறித்த குப்பைகள் சில நாட்களுக்கு முன்னர் தீயிடப்பட்டுள்ளது. இதனால் அல்லிப்பளை பிர தேச மக்கள் புகை மற்றும் துர்நாற்றம் காரணமாக பாதிக்கப்பட்டதாக தெரிவிக் கின்றனர்.

இந்த நிலையில் நேற்றுக் காலை 10 மணியளவில் பளை பேருந்து நிலையத்தி லிருந்து கவனயீர்ப்பாக சென்ற மக்கள் பளை பிராந் திய சுகாதார சேவைகள் பணிமனைக்கு முன்பாக கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். கவனயீர்ப்பு போராட்டத் தைத் தொடர்ந்து மகஜரும் கையளிக்கப்பட்டது. (நி-100)

# போக்குவரத்து தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு

(அக்கராயன்)

கிளிநொச்சி மத்திய கல் லூரியில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு கருத்துகளை போக்குவரத்து பொலிஸார் வழங்கினர்.

இக்கல்லூரியில் 276 மாண வர்கள் இவ்வாண்டு உயர்தர வகுப்பில் இணைந்துள்ள நிலையில் திசை முகப்படுத்தல் கருத்தரங்குகள் தொடர்ச்சியாக நடை பெற்று வரும் நிலையில் இதன் ஒரு கட்டமாக மாணவர் களுக்கான போக்குவரத்து விதி முறைகள், குற்றச்செயல்கள் தொடர்பான விழிப்புணர்வுகள், சட்டங்கள் தொடர்பான கருத்து ரைகளை போக்குவரத்து பொலிஸார் வழங்கி உள்ளனர். இதன் மூலம் மாணவர்கள் பெரும் நன்மையடைந்துள் ளனர். (நி-350)

# மோட்டார் சைக்கிள் திருட்டு சந்தேக நபர் கைது

(சாவகச்சேரி)

மோட்டார் சைக்கிள் திருடிச் சென்ற வழக்கில் இளைஞர் ஒருவரை பொலி ஸார் கைது செய்தனர்.

கடந்த மாதம் 26 ஆம் திகதி யாழ்ப்பாணம் நீதிவான் நீதி மன்றுக்கு அருகில் மோட்டார் சைக் கிள் திருடப்பட்டதாக யாழ்ப் பாணம் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடொன்று பதிவு செய்யப்பட்டது.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற் கொண்ட யாழ்ப் பாணம் பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பிரேமதிலக தலைமையி லான பொலிஸார் 24 வய தான சந்தேக நபரை சாவ கச்சேரிப் பகுதியில் கைது செய்தனர்.

சந்தேக நபரிடம் இருந்து திருடப்பட்ட மோட்டார் சைக் கிளும் ஒரு கிராம் 30 மில்லிக் கிராம் அளவான ஹெரோயினும் மீட்கப் பட்டது.

சந்தேகநபரை யாழ்ப்பா ணம் நீதிவான் நீதி மன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (நி-33)




வருணியா




மாதவன்




அகரன்




அக்ஷயா




மதுமிதா




தண்விகா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

noolaham.org | aavanaham.org

## பூநகரியில்...

பயணித்த கப்ரக வாகனமும் யாழ்ப் பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளும் குட முருட்டி பகுதியில் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற் றுள்ளது.

விபத்தில் கிளிநொச்சி கோணாவில் பகுதியைச் சேர்ந்த 55 வயதுடைய கோ.புருசோத் எனும் இரண்டு பிள் ளைகளின் தந்தையே சம்பவ இடத் தில் உயிரிழந்திருந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்துத் தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ம-7,10,315)

## 2 பிள்ளைகளின்...

லேயே நேற்று இக்கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

சந்தேகத்தின் அடிப்படையில் 30 வயதான பெண்ணின் கணவர் யாழ்ப் பாணம் பொலிஸாரால் கைது செய்யப் பட்டார்.

கொலைச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (ம-7,10,33)

## திருகோணமலை...

செலுத்துமாறு பொதுமக்கள் வேண்டப் படுகின்றார்கள். சமயச் சடங்குகள் அதன்பின் ஆரம்பமாகும்.

அஞ்சலிக் கூட்டமும் பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகி அன்னாரின் புகழுடல் தகனத்துக்காக மாலை 3 மணிக்கு திருகோணமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தனின் இறுதி ஊர்வலத்தில் அரசியல்வாதிகள், மத குருமார்கள், கல்விச் சமூகத்தினர், சிவில் அமைப் புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொது மக்கள் எனப்பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. (ம-7,10)

## பேருந்தில்...

ந்த இருவரும் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறியுள் ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவு னியா நோக்கி நேற்று மாலை பயணித்த பேருந்தில் இருந்த இருவர் மீதே குறித்த வாள்வெட்டுச் சம்பவம் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், விரைந்து செயற் பட்ட கிளிநொச்சி பொலிஸார் சம்பவத் துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7,10,315)

## சம்பள...

ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று வெல்லவயில் நிகழ்வு ஒன் றில் கலந்து கொண்டபோதே ஜனாதி பதி இதனைத் தெரிவித்தார்

ஜனாதிபதித் தேர்தலுக்கும் பொதுத் தேர்தலுக்கும் தயாராக வேண்டியிருப் பதால் அரச ஊழியர்களின் சம்பளத்தை இந்த வருடம் மீண்டும் அதிகரிக்க முடி யாது என ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-7,10)

## மன்னாரில்...

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அடம்பன் பகுதியில் வசித்து வந்த முன்னாள் போராளி ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நள்ளிரவு இடம் பெற்றுள்ளது.

கோபாலகிருஷ்ணன் கோகுல் பிறேம் குமார்(வயது-42) என்ற குடும்பஸ்தரே மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இரவு அடம்பன் வீதியில் உள்ள தனது வீட்டிற்கு முன் நின்று தொலை பேசி யில் உரையாடிக் கொண்டிருந்தார்.

இதன்போது தன்னை வாகனத் தால் மோதி விட்டுச் சென்று விட்டனர் என சத்தம் போட்டுள்ளார்.

இதன்போது குடும்பத்தினரின் உதவியுடன் உடனடியாக அடம்பன் வைத்தியசாலைக்கு கொண்டு செல் லப்பட்டு மேலதிக சிகிச்சைகளுக்காக மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். சடலம் மன்னார் பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள் ளது. சடல பரிசோதனையின் பின்னர் மரணத்திற்கான காரணம் தெரிய வரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,10,285)

## பெரமுனவின்...

யிடத் தயார் என பிரபல வர்த்தகரும் பாராளுமன்ற உறுப்பினருமான தம் மிக்க பெரேரா நேற்று முன்தினம் குறிப் பிட்டிருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் ஊடகங் களுக்குக் கருத்துரைத்துள்ள முன் னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, தங்களது கட்சி இதுவரையில் இறுதி தீர்மானத்தை மேற்கொள்ளவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்த கலந்துரையாடல்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின் றன.

எவ்வாறாயினும் வேட்பாளர் தொடர் பில் உரிய நேரத்தில் அறிவிக்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (ம-7,10)

## மாபெரும்...

கள் மற்றும் பொதுமக்களால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலை பதில் வைத்திய அத்தியட்சகர் ராமநாதன் அர்ச்சுனாவை மாற்றக் கோரி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் மூன் றாவது பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வரு கின்றனர். (ம-7,10,30,33)

## மசகு...

வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 86.54 அமெ ரிக்க டொலராக நிலவுகிறது.

இதேவேளை, உலக சந்தையில் இயற்கை எரி வாயுவின் விலை நேற்றைய தினம் 2.31 அமெரிக்க டொலராக வீழ்ச் சியைப் பதிவு செய்துள்ளது. (ம-7,10)

## தேசிய...

ய க் கூ டு ம் என்பதாலேயே இந்த முடிவு எடுக் கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதேவேளை, தேசிய அரச மைக்கும் திட் டத்தை கடுமை யாக எதிர்ப்போம் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலை வர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் அறிவித் துள்ளனர். (ம-7,10)

# அம்பாந்தோட்டையில் வீதி விபத்து; ஒருவர் பலி

அம்பாந்தோட்டை பிரதேசத்தில் லுணுகம்வெஹர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மொனராகலை - மாத்தறை பிரதான வீதியில் தெவரம்வெஹர பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக லுணுகம்வெஹர பொலிஸார் தெரி வித்தனர்.

இந்த விபத்து நேற்று முன்தினம் வெள் ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

தணமல்விலயிலிருந்து திஸ்ஸ மஹாராமை நோக்கிப் பயணித்த முச் சக்கரவண்டி ஒன்று சாரதியின் கட்டுப் பாட்டை இழந்து பாலத்தின் தூண் மீது மோதி கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தின்போது முச்சக்கரவண்டி சாரதியும் பின்புறத்தில் அமர்ந்திருந்த இரண்டு நபர்களும் காயமடைந்துள்ள நிலையில் லுணுகம்வெஹர வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் பின்புறத்தில் அமர்ந்திருந்த நபரொரு வர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7,10)







































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெல்டிங் வேலையாள் தேவை

- யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வெல்டிங் கடை ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த வேலையாள் தேவை.
- மதிய உணவு வழங்கப்படும்.
- சம்பளம் :- நாள் ஒன்றிற்கு 4,000/-.
- மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும். (1386)

தொடர்புகளுக்கு:
**077 937 0000, 075 988 1000**

## வாடகைக்குத் தேவை

அலுவலகம் ஒன்றிற்காக வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடிய விசாலமான வீடு அல்லது கட்டிடம் நீண்ட கால வாடகைக்குத் தேவை. யாழ் நகரில் அல்லது நகரை அண்மித்த இடங்கள் விரும்பத்தக்கது. கே.கே.எஸ் வீதியாயின் சத்திரச் சந்தியில் இருந்து கொக்குவில் வரைக்கும் கே.கே.எஸ் வீதியை முகப்பாக கொண்ட வீடுகளோ கட்டிடங்களோ விரும்பப்படும். (134)

தொடர்புகளுக்கு: **077 607 2762**

## பணியாளர் வெற்றிடம்
### யாழ்ப்பாணம்

- கணக்காளர் (பெண்கள்) - (HNDA / கணனி அறிவுடன் முன் அனுபவம் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.)
- கணனி அறிவுடன் கூடிய அலுவலக உதவியாளர் (பெண்கள்)
- வாகனத்தில் பொருட்கள் ஏற்றி இறக்க விநியோகிக்க ஆண்கள் தேவை. (Delivery Boy)
- EPF / ETF கொடுப்பனவு வழங்கப்படும்.
- நிரந்தர தொழில்.
- சுய விபரக் கோவையுடன் நேரில் வருகை தரவும். (1398)

**Ess Jey Electricals No.9 Stanly Road, Jaffna**
**021 222 2564, 021 222 7430**

## வேலை வாய்ப்பு

எமது நிறுவனத்தில் பின்வரும் நிலைகளில் பணியாளர் வெற்றிடத்திற்கு ஆளணி உள்வாங்கப்படவுள்ளனர். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- அலுவலக பணியாளர் (O/L, A/L) (கணினி அறிவுடையோர்)
- களஞ்சிய பணியாளர் (O/L, தரம் 10)

**A to Z CONSTRUCTION Equipment Rental Service, Koolavady, Anaicoddai.** (1389)
**021 222 9198, 077 655 5395**
(தெரிவு செய்யப்படுவோருக்கான சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம்)

## பணியாளர் தேவை

சண்டிலிப்பாய் தனியார் பால் விற்பனை நிலையத்திற்கு தயிர், நெய் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவரும், விற்பனை செய்யவும் ஆண் பணியாளர் தேவை. வயது எல்லை 35 இற்கு மேல் இருத்தல் நன்று. (137)
**070 118 8111**

## வேலையாட்கள் தேவை

எமது தளபாட நிலையத்திற்கு கீழ்வரும் வேலையாட்கள் தேவை.
- தச்சு வேலையாட்கள் (75,000/= மேல்)
- தளபாட பெயின்ரர் (60,000/= மேல்)
- வேலை பழக விரும்புவர்கள் (25,000/= மேல்)

நிரந்தரமான வேலையும், தங்குமிட வசதியும் உண்டு.
**ஆர்க் தளபாட நிலையம்**
இல. 35, கொட்டைக்காடு லேன், கோண்டாவில் கிழக்கு. (பஸ் டிப்போ அருகாமை) (1400)
T.P : 021 221 9909, 077 300 1763

## வேலைக்கு ஆள் தேவை

வீட்டில் தங்கி நின்றுவேலை செய்வதற்கு வேலையாட்கள் தேவை. (பெண்) (C-0751)
**074 306 6874**

## லொத்தர் விற்பனையாளர் தேவை

தேசிய அபிவிருத்தி லொத்தர் ரிக்கட் விற்பனை செய்ய யாழ் மாவட்டம் உள்ளிட்ட இடங்களிற்கு விற்பனையாளர் தேவை. (1394)
**077 122 8841**

## காணி விற்பனைக்கு

ஊரெழு மேற்கில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு 2 பரப்பு, 3 பரப்பாக பிரித்து தரப்படும். ஊரெழு பலாலி றோட்டில் இருந்து 300m - 400m தூரம், நல்ல சூழல். விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம். (1395)
**077 617 2892**

## சேவை


முதியோர் பராமரிப்பு சகல வசதிகளுடனும்
**077 024 2031** (Whatsapp)
**077 069 3486**
**077 442 9869**

## வேலைவாய்ப்பு

Office Assistant - Female
வேலை நேரம் காலை 09:00am to 05:00pm
Sales Executive - Feild (Male / Female)
PickMe Jaffna பிரெஞ்ச் (138)
210, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணம்
**077 473 7737**

## Happy Supermarket - உரும்பிராய்

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 256/= | | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 280/= | (Max)3Kg | |
| 1 Kg Prima கோதுமை மா | - 169/= | | |
| 1 Kg றவை | - 286/= | | |
| 1 Kg சம்பா | - 230/= | | |
| 1 Kg அவல் | - 260/= | | |
| 1kg தீட்டல் பச்சை | - 189/= | | |
| 1 Kg வெள்ளைப் பச்சை | - 205/= | | |
| 1 Kg உளுத்தம் பருப்பு | - 980/= | | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~115/=~~ | |
| 180ml Chik சம்போ | - 350/= | ~~480/=~~ | |
| 70g பேபி சோப் | - 110/= | ~~145/=~~ | |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 310/= | ~~380/=~~ | |
| 400g நெஸ்டமோல்ட் | - 729/= | ~~780/=~~ | |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 142/= | ~~175/=~~ | |
| 750g சுபோஷ சத்துமா | - 560/= | ~~590/=~~ | |

Max 01
400g Anchor
1015/=

~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி. (0140)
**Happy Supermarket 0777 8080 30**

## Care Giver - பராமரிப்பாளர்

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

**CIMS College** 49A, Chapel Street, Jaffna. (C-0748)
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

## வங்கி மீதி வசதி (Show money)

சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள் (135)
தொடர்புகளுக்கு:
**074 17 37 684**

## அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள்
### குறைந்த விலையில்

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

(C-0748)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி | புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர் | யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு | சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய் | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை

**V2 TRAVELS** 0768226240 0768226241

## V2 VISA SERVICES
### கனடா

077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**
- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு (C-0748)

## வாடகைக்கு உண்டு




இரண்டு தளம் கொண்ட கடைத்தொகுதி வாடகைக்கு விடப்படும். 4000 சதுர அடி (1382)

இல - 1170, 3ம் கட்டை, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு:
**077 668 1527, 077 264 5912**

## காணி விற்பனைக்கு




கீரிமலை நகுலேஸ்வரம் வீதியில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (1403)

தரகர்கள் தொடர்புகொள்ளத் தேவையில்லை. வாங்க விரும்புபவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்

**077 348 9896**

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191 ... யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org